# கொங்கு மாமணி



## திரு. M. முருகேசன்

பத்தாயிரம் பேருக்கு 20 ஆயிரம் கண்கள் அளிப்பது சின்ன விஷயம் அல்ல. உலகின் அற்புதங்களை, இன்றைய புரிணாம வளர்ச்சியை, இரவென்றும் பகலென்றும் பிரித்து பார்க்கக் கூடிய பாக்கியத்தை 10 ஆயிரம் பேருக்குத் தருவதென்பது எவ்வளவு பெரிய சாதனை! பார்வைகள் மட்டும் அல்லாமல் ஆயிரக் கணக்கானோர்க்கு கல்விக் கண்களையும் கொடுத்து வருபவர்தான், இந்த வெள்ளை உடைக்குள் இவ்வளவு சக்தியா என்று அனைவரும் வியக்கும், அனைவராலும் அன்போடு **NSIT** முருகேசன் என்று அழைக்கப்படும் பெரியவர் நாமக்கல் முருகேசன் அவர்கள்.

திரு. ந. மொட்டைய கவுண்டர்– திருமதி சின்னம்மாள் தம்பதியர்க்கு 12.01.1936–ஆம் ஆண்டு நாமக்கல்லில் பிறந்தவர் திரு. எம். முருகேசன் அவர்கள். திரு. முருகேசன் அவர்களின் மனைவி திருமதி தனலட்சுமி வள்ளுவருக்கு ஒரு வாசுகி போல் அமைந்துள்ளார். இத்தம்பதியருக்கு சரவணன், கார்த்திக் என்ற இரு மகன்கள் உள்ளனர்.

திரு. முருகேசன் அவர்கள் காரைக்குடி டாக்டர் அழகப்ப செட்டியார் கல்லூரியில் B.Sc., பட்டம் பெற்றவுடன் நாமக்கல்லில் தந்தைக்கு உதவியாக சரக்குப் போக்குவரத்துத் தொழிலில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். 1956–ஆம் ஆண்டு தந்தையாரோடு இணைந்து அப்போது அவரிடம் இருந்த இரண்டு சரக்குப்போக்குவரத்து வாகனங்களுடன் தொழிலைத் தொடங்கினார். தொழிலைப் பெரிய அளவில் நாடு முழுவதும் விரிவுபடுத்தவும், வளர்த்திடவும் எண்ணி, 1963–ல் NSIT (Namakkal South India Transpots (Regd)) என்ற பெயரில் நாமக்கல்லில் தலைமையகமும், சென்னையில் கிளை அலுவலகமும் இவரால் தொடங்கப்பட்டன. கடின உழைப்பு, தொழில் நேர்மை ஆகிய இரண்டையும் தாரக மந்திரமாகக் கொண்டு தற்போது NSIT நிறுவனம் அடைந்துள்ள வளர்ச்சியும், முன்னேற்றமும் ஈடு இணையற்றது. இந்திய

நாட்டின் முக்கிய நகரங்கள் அனைத்திலும் கிளை அலுவலகங்கள் உள்ளன என்பதும், இந்தியப் பெருநாட்டின் மத்திய, மாநில, பெரிய தனியார் நிறுவனங்களான TNPL, SSP, BHEL, ONGC, NLC, MFL, SPIC போன்ற நிறுவனங்களின் நீண்ட கால ஒப்பந்தங்களைப் பெற்று சரக்குகளை நல்ல முறையில் கையாண்டு வருகிறார். கட்டுமானப் பணிகளில் முன்னோடிகளாக உள்ள L&T, RMC, Chettinadu, HCC போன்ற நிறுவனங்களுக்கு நவீன இயந்திரங்களான Transit Mixer, Concrete Pump, Bouser போன்றவற்றைக் கொண்ட 200க்கும் மேற்பட்ட வாகனங்களைக் கொண்டு அவர்கள் போற்றும் வண்ணம் சிறந்த பணியாற்றி வருகிறார். தங்களின் MGM Travels மூலம் நவீன, கொகுசு வாகனங்களைக் கொண்டு பயணிகள் போக்குவரத்தில் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்து, பயணிகள் அனைவரின் பாராட்டைப் பெற்றுள்ளார். திரு. முருகேசன் அவர்கள் தன்னுடைய நான்கு இளைய சகோதரர்களின் துணையோடு போக்குவரத்துத் தொழிலில் அடைந்துள்ள வியக்கத்தகு வளர்ச்சியும், செய்துள்ள மாபெரும் சாதனையும் எண்ணி எண்ணிப் போற்றத்தக்கவை.

1976–ஆம் ஆண்டு புகழ் பெற்ற ASHOK LEYLAND நிறுவனம் தங்களுடைய வாகனங்களில் 100க்கும் மேல் சொந்தமாகக் கொண்டவர்கள் NSIT நிறுவனம் மட்டும் தான் எனக் கண்டறிந்து, திரு. முருகேசன் அவர்களை அனைத்து வாகனங்களுடன் சேர்த்துப் படம் எடுத்து, புகழ் பெற்ற தேசிய நாளேடுகளில் விளம்பரம் செய்து கௌரவித்தது.

NSIT மற்றும் MGM நிறுவனங்கள் சார்பில் எண்ணற்ற ஏழை மாணவர்களுக்கு வருடந்தோறும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவ்வாறு உதவி பெற்று, உயர்கல்வி பெற்ற மாணவர்கள், இன்று பல்வேற துறைகளிலும் பெரிய பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். NSIT மற்றும் MGM நிறுவனங்கள் சார்பில் மாநில அளவிலான கூடைப்பந்துப் போட்டிகள் மூன்றாண்டுகள் சிறப்பாக நடத்தப்பட்டன. தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள நாமக்கல் கூடைப்பந்துக் கழகத்தின் புரவலர்களாக திரு. முருகேசன் அவர்களும், அவருடைய சகோதரர்களும் உள்ளனர். 1988– ஆம் ஆண்டு முதல், 18 ஆண்டுகளாக NSIT மற்றும் MGM நிறுவனங்கள் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையின் துணையுடன் இலவசக் கண் சிகிச்சை முகாமினை மிகச்சிறப்பான முறையில் நடத்தி வருகின்றன. நாமக்கல்லில் நடைபெறும் கண் சிகிச்சை முகாமில் கண்புரை அறுவைச் சிகிச்சைக்காகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு அனைத்து

சிகிச்சை செலவுகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதுவரை சுமார் **10,000** பேருக்கும் மேற்பட்டவர்கள் அறுவை சிகிச்சை செய்து கொண்டு பயனடைந்துள்ளனர் என்பதும், சுமார் **30,000** பேருக்கும் மேற்பட்டவர்கள் முகாமில் புறநோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்டனர் என்பதும் மிகவும் பாராட்டுக்குரிய சாதனையாகும்.

போக்குவரத்துத் துறையில் இவர் புரிந்துள்ள அரும்பெரும் சாதனைகள் மற்றும் சேவைகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் வண்ணம் "Transport Samrat" என்ற இந்திய அளவிலான மிகப்பெரிய விருதினை Honourable Minister for Transport and Highways, Government of India - விடமிருந்து திரு. முருகேசன் அவர்கள் பெற்றார்கள் என்பது நமது சமுதாயத்திற்கும், தமிழகத்திற்கும் கிடைத்த பெரிய பெருமையாகும்.

**1983–**ம் ஆண்டு பெருந்துறையில் துவங்கப்பட்ட "கொங்கு வேளாளர் தொழில் நுட்பக் கல்லூரி அறக்கட்டளைய்யின்" **41** அறங்காவலர்களில் ஒருவராக கல்விப்பணியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். தற்போது இந்த அறக்கட்டளையின் தலைவராக உள்ளார். கொங்கு சாதனையாளர் விருதும் இவர் பெற்றுள்ளார்.

தொழிற்துறையில் மாபெரும் சாதனை, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும்பாங்காற்றியது, சமுதாய சேவை, சமூக சேவை என இவரது சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். திரு. முருகேசன் எளிமை, இன்சொல், ஓய்வறியாக் கடின உழைப்பு, தொழில் நேர்மை போன்ற குணங்களின் மொத்த உருவமாகத் திகழ்ந்து வருபவர். குடும்ப ஒற்றுமைக்கும், கூட்டுக் குடும்பத்திற்கும் சிறந்ததோர் உதாரணமாக விளங்கி வருபவர். கொங்குச் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் தம் அரிய சேவைகளால் பெருமை தேடித்தந்துள்ள திரு. முருகேசன் அவர்கட்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு மாமணி' விருது அளிப்பதில் பெருமைப்படுகிறது.

## கொங்கு மாமணி



## திரு. K. பழனியப்பன்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் கொங்கு நாடு முழுவதும் பிரசித்தி பெற்றது. 3000 அங்கத்தினர்கள், சென்னையின் நடுவில் இரண்டு பெரிய கட்டிடங்கள், மாதந்தோறும் நிரந்தர வருமானம், நலிந்தோர்க்குச் செய்யும் உதவிகள் எனப்பல சிறப்புகளைப் பெற்றுள்ளது. நிர்வாக மற்றும் செயற்குழுவுக்கு ஆள் கிடைக்காமல் கெஞ்சிய காலம் போய் இன்று தேர்தல். இவ்வளவும் எப்படி ? இது 40 ஆண்டுகாலச் சாதனை. படிப்படியாக வெவ்வேறு கால கட்டத்தில் கொங்கு தலைவர்கள் தூண்களாக நின்று தூக்கியது தான். மண்ணுக்குமேல் உள்ள தூண்கள் எல்லோருக்கும் தெரியும், ஆனால் மண்ணுக்குக் கீழே அடித்தளத்தில் உள்ள தூண்கள் மேலே தெரிவதில்லை. ஆனால் மேலெழும்பி நிற்கிற கட்டிடத்தின் ஆணி வேர் அவை. அப்படியிருந்த ஆணிவேர்களில் ஒரு வேர் தான் பிரிசிசன் பழனியப்பன் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. கே. பழனியப்பன் அவர்கள். இவரைப் போன்றவர்கள் அமைத்துக் கொடுத்த மேடையில் தான் நாம் வேஷம் போடாமல் நடித்துக் கொண்டிருக்கிறோம்.

1942 ஆம் வருடம் நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோட்டிற்கும் பள்ளிபாளையத்திற்கும் அருகில் உள்ள கொக்கராயன் பேட்டை புதூர் என்ற கிராமத்தில் திரு. கந்தசாமிக் கவுண்டர் திருமதி குப்பாயம்மால் தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். பள்ளிப்படிப்பு முடித்த கையோடு 1961–ல் சென்னைக்கு வேலை தேடி வந்தவர். இன்று போல் அன்று சென்னையில் கொங்கு நண்பர்கள் இல்லை. யாரையுமே தெரியாமல் உழைப்பு ஒன்றையே உறுதுணையாகக் கொண்டு முன்னேறியவர்.

ஆரம்ப காலத்தில் அவர்பட்ட துன்பங்கள் சொல்லி மாளாது. அவர் நாளங்களில் ஓடிய வெறிபிடித்த கொங்கு ரத்தம் அவரை 1964–ல் சொந்தமாகத் தொழில் தொடங்க வைத்தது. "பிரிசிசன் சயின்டிபிக் கம்பெனி" என்ற பெயரில் தொடங்கி பள்ளிகள், கல்லூரிகள், சோதனைக் கூடங்களுக்குத் தேவையான உபகரணங்களை விற்பனை

செய்து வந்தார். முன்னேற வேண்டும் என்ற ஒரே தாகத்தில் தமிழகம் முழுவதும் சுற்றிச் சுற்றி வியாபாரத்தைப் பெருக்கினார்.

பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகப் பலவிதமான தொழில்களில் இறங்கினார். கெமிக்கல் விற்பனை, இயந்திரங்கள் உற்பத்தி, கட்டிடங்கள் கட்டுமானம், திரைப்படத் தயாரிப்பு என்று எதையும்விட்டு வைக்காமல் முன்னேற்றப்படிகளில் கிடுகிடுவென ஏறி உச்சத்தை அடைந்தவர்.

முன்னோர் சம்பாதித்து வைத்த மூலதனம் இல்லாமல், தானே உருண்டு புரண்டு முன்னேறிய காரணத்தால் அவருக்கு உதவி செய்யும் குணம் இயல்பாகவே அமைந்துள்ளது. அவர் கொங்குச் சமுதாயத்திற்கு ஆற்றிய நற்பணிகளிலேயே முதலானது, தலையாயது, கொங்கு நாட்டிலிருந்து சொந்தங்களைக் கூட்டி வந்து முன்னேற்றியது தான். அவரிடம் தொழில் பயின்று இன்று சென்னையில் முன்னேறியவர்கள் வரிசையில் உள்ள தொழிலதிபர்கள் எராளம். அவர்கள் அனைவரையும் உயரத்திலே வைத்து அண்ணாந்து பார்த்து சந்தோஷப்படுபவர். உண்மையைச் சொன்னால், அவரிடம் தொழில்பயின்று தொழிலதிபர்கள் ஆகியிருப்பவர்கள் எல்லாம் இவரிடமே தொடர்ந்திருந்தால் இன்று பிரிசிசன் குரூப் ஆப் கம்பெனிகள் ஒரு ரிலையன்ஸ் போல, டாட்டா போல வளர்ந்திருந்திருக்கக் கூடும். இவருடைய பயிற்சியில் உருவான தொழிலதிபர்களிடத்தில் பணிபுரியும் கொங்கு சொந்தங்கள் நூற்றுக் கணக்கானோர் ஆவர்.

1976–லேயே நட்சத்திர இரவு நிகழ்ச்சியை முன்னின்று நடத்தியவர். இன்று கோடி கோடியாகச் சொத்துள்ள சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முதலீட்டுக்கு வித்திட்ட தொகை அன்று இவர் ஈட்டிய அறுபது ஆயிரம் ரூபாய். அதுதான் இன்று பல மடங்காகப் பெருகியிருக்கிறது.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சியில் அவருக்கு முழுமையான பங்கு உண்டு. கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சி என்பத கொங்குச் சமுதாய வளர்ச்சி. இவரால் கொங்கு நாட்டு கிராமப்புற பொருளாதாரம் வளர்ந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. இவருடைய அறிவுரையிலும் பயிற்சியிலும் வளர்ந்த கொங்கு சொந்தங்கள் சென்னையில் மட்டுமல்ல, அனைத்து நகரங்களிலும் உள்ளார்கள். "சயின்டிபிக் இன்ஸ்ட்ருமென்ட்ஸ்" தொழிலில் இந்தியாவில் உள்ள கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இவருடைய தொடர்பில்லாமல் இருக்க வாய்ப்பில்லை.

சென்னைக்கு வந்து தொழில் தொடங்கியவர்களில் முதல் வரிசையில் ஒருவராக உள்ள திரு. பிரிசிசன் கே. பழனியப்பன் அவர்கள் தற்போது பிரிசிசன் சயின்டிபிக் கமபெனி, பாலமுருகள் கன்ஸ்ட்ரக்ஷ்ன், ஸ்ரீ வெங்கடேஷ் பேக்கிங் எண்டர்பிரைஸ், பிசஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ், மெடிக்லோன் பயோடெக் பிரைவேட் லிமிடெட் எனும் பல்வேறு நிறுவனங்களைச் சிறப்பாக நடத்தி வருகிறார். இவரது மனைவி திருமதி சகுந்தலா. இவர்களுக்கு பாலமுருகன் என்ற பெயரில் ஒரே மகன்; இரண்டு பேத்திகள்.

இவருடைய அனுபவம் 10 MBA-வுக்குச் சமம். வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருப்பவர்கள் தொழில் செய்து முன்னேறுவது எப்படி என்பதற்கு இவருடைய வாழ்க்கை ஒரு முன்னுதாரணம். இப்படித் தானும் வளர்ந்து கூட இருப்பவர்களையும் வளர்ந்த அன்னார் அவர்களுக்குக் ‘கொங்கு மாமணி’ விருது வழங்குவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## கொங்கு மாமணி



## திரு. சி.கே. ராமசாமி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் தலைமைச் செயலகத்திலிருந்துதான் உருவானது என்று எல்லாப் பெரியவர்களும் அறிவர். பெரியவர் கொங்கு மாமணி சென்னியப்பக் கவுண்டர் அவர்களும் பெரியவர் அண்ணன் சண்முகம் அவர்களும் சொல்லித் தெரிவர் பலர். தலைமைச் செயலக கொங்கின ஊழியர்கள் தொடர்புக்காக ஏற்படுத்தியது தான் கொங்கு நண்பர்கள் சங்கம். அன்று கொங்கு சங்கம் உருவாக்கிய சிற்பிகளில் ஒருவர்தான் தலைமைச் செயலகத்தில் 1955–ல் சட்டமன்ற செயலராகப் பணியாற்றிய பெரியவர் திரு.சி.கே.ராமசாமி அவர்கள்.

1932 ஆம் வருடம் ஈரோடு மாவட்டம், பவானி வட்டம் சின்னியம்பாளையம் என்ற சிறிய கிராமத்தில் கூறை கூட்டக் குலவிளக்காகத் தோன்றினார். பிறந்த கிராமத்தின் முதல் பட்டதாரி ஆவார். ஆரம்பக் கல்வியை கவுந்தப்பாடியிலும், மேல்நிலைக் கல்வியைக் கோபி வைர விழா மேனிலைப் பள்ளியிலும், இன்டர்மீயட் படிப்பை திருச்சி தேசியக் கல்லூரியிலும், பட்டப்படிப்பை மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும், சட்டப்படிப்பை சென்னை சட்டக் கல்லூரியிலும் படித்தவர்.


சென்னை உயர்நீதி மன்ற முன்னால் தலைமை நீதிபதியும், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதியுமான திரு. பி.எஸ். கைலாசம் அவர்களிடம் முதலில் வழக்கறிஞர் பயிற்சி பெற்று, 1955 ஆம் ஆண்டு சட்டமன்றச் செயலகப் பணியில் சேர்ந்தார். துணைச் செயலர், மேலவைச் செயலர், பேரவையின் ஆணையர் – செயலர் ஆகிய பதவிகளில் தன் முத்திரையைப் பதித்தவர். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட 9 சட்ட மன்றங்களில் பணியாற்றும் வாய்ப்பு பெற்றவர். 1989 ஆம் ஆண்டு பார்படோஸ் நாட்டில் பிரிட்ஜ் டவுன் நகரில் நடைபெற்ற காமன் வெல்த் பாராளுமன்ற கருத்தரங்கில் கலந்து கொண்டவர். வேலை நிமித்தமாக பல வெளிநாடுகளுக்குப் பயணம் செய்துள்ளார்.

இவருடைய சிறப்புகளைப் பற்றி சட்டமன்றப் பேரவையில் **12.05.1990** அன்று அனைத்து அமைச்சர்களோடும் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களும் போற்றிப் புகழ்ந்தார்கள். கலைஞர் அவர்கள் குறிப்பிடும் போது இவருடைய சாதக பாதகமில்லாத நடுநிலைமையைப் பற்றிப் புகழ்ந்தார். அன்று அதை கொங்கு சமுதாயம் தனக்குக் கிடைத்த பெருமையாக நினைத்து மகிழ்ந்தது.

C.K.R. என்று அன்புடன் அழைக்கப்படும் C.K. ராமசாமி அவர்கள், இந்தியத் துணைகண்டத்துக்கு சட்டங்களை வகுத்த டாக்டர் அம்பேத்கார் போல, கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சட்டதிட்டங்களை வகுத்தவர். இந்நாளில் ஆட்சி மாறினால் அதிகாரம் மாறக்கூடிய நிலை உள்ள காலத்தில் தொடர்ந்து வெவ்வேறு ஆட்சியாளர்களின் கீழ் சட்டமன்றச் செயலராகப் பணியாற்றி உள்ளவர். அனைத்துக் கட்சிகளாலும் நடுநிலைவாதி என்று போற்றப்பட்டவர். இன்றுகூட அனைத்து கட்சிகளும் கொங்கு சமுதாயத்தினரை நடுநிலைவாதிகள் என்றும், நாணயமானவர்கள் என்றும், நீதியை நிலைநாட்டுபவர்கள் என்றும் கருதுவது எல்லாம் திரு. C.K.R போன்றவர்கள் கொங்கு இனத்தவர்களுக்குச் சேர்த்து வைத்த சொத்துகளாகும்.

பலவகையில் இந்தச் சமுதாயத்திற்கும் தான் பிறந்த இந்த மண்ணிற்கும் நற்காரியங்களை ஆற்றி அதை பறைசாற்றிக் கொள்ள விரும்பாத திரு. C.K.R. அவர்களுக்கு 'கொங்கு மாமணி' விருது கொடுப்பதில் இச்சங்கம் பெருமையடைகிறது.

## சாதனையாளர்



## திரு. கே. அம்மையப்பன்

மாநிலக் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையின் துணைத் தலைவர். 58வயது இளைஞர். கரூர் மாவட்டம், மூக்கணாங்குறிச்சி கிராமம் அம்மையப்பக்கவுண்டம் புதூர் பெருங்குடி குல திரு. கருப்பண்ண கவுண்டர் – திருமதி பழனியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவர் 1966–ம் ஆண்டு லட்சுமி என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு வாசுகி, நீலாவதி என்ற இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். பின்னர் 1975ல் வேம்பாயி என்ற பெண்ணை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு சிவசுப்ரமணியன் என்ற மகன் உள்ளார்.

கொங்குச் சமுதாயப் பணி என்பது அவர் உடலோடும் உயிரோடும் கலந்தது, கொஞ்ச நஞ்சமல்ல – 30 ஆண்டுகால சமுதாய சேவை. 1994 ஆம் ஆண்டு கரூரில் நடந்த சரித்திரப் புகழ் வாய்ந்த கொங்கு வேளாளக் கவுண்டர்களின் மாநாட்டை, தலைவர் திரு. கோவை செழியனார் தலைமையில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ராஜேஷ் பைலட் மற்றும் திரு. கே.வி. தங்கபாலு ஆகியோர் முன்னிலையில் மிகச்சிறப்பாக நடத்த மிகவும் உறுதுணையாக இருந்தார்.

கரூரில் வெட்டு குத்தாக இருந்த ஜாதி மோதலை, முன்னாள் ஐ.ஜி. குமாரசாமி தலைமையின் கீழ் முன்னின்று தடுத்த பெருமை இவரைச் சேரும்.

கரூர் பனியன் நெசவு தொழிற்காலை உரிமையாளர்கள் சங்கத்தில் மூன்று ஆண்டு காலம் கமிட்டி உறுப்பினராகவும், இரண்டு ஆண்டு காலம் உப தலைவராகவும், எழு ஆண்டு காலம் தலைவராகவும் பணியாற்றி ஐம்பதாவது வருட பொன்விழாவில் தமிழக அமைச்சர்கள் நான்கு பேர்களைக் கலந்து கொள்ள வைத்து விழா சிறக்க பெரும்பாடுபட்டார்.

கொங்கு கல்வி அறக்கட்டளை நிறுவ இரண்டு வருட காலம் கொங்கு நண்பர்களை ஒன்று திரட்டி கொங்கு கல்வி அறக்கட்டளை ஆரம்பித்து அதன் முதல் தலைவராகவும், மூன்று முறை தலைவராகவும் (ஒன்பது ஆண்டு காலம்) பணியாற்றி வருகிறார். அறக்கட்டளையின் மூலம் நடத்தப்பெறும் கொங்கு வெள்ளாளர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் கொங்கு கலை அறிவியல் கல்லூரி என்ற இரண்டு கல்வி நிறுவனங்களில் இரண்டாயிரம் மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இதனால் கரூர் மாவட்ட ஏழை கொங்கு மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகின்றனர்.

கரூர் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள கொங்கு வேளாளர் திருமண மண்டப உணவுக் கூடம் கட்டுவதற்கு அதிக நிதியினைப் பெற்றுத் தந்துள்ளார்.

வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை எளிய கொங்கு மாணவ, மாணவியர்கள் தொழிற்கல்வி பயில தொழிலதிபர்களிடம் நிதியைப் பெற்றுப் தந்ததன் மூலம் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் (டாக்டர், இன்ஜினியர், அக்ரி) பட்டம் பெற்று தொழில் செய்து வருகிறார்கள்.

வருடந்தோறும் 10–ம் வகுப்பு, 12ம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்க்குச் சிறப்பு நிதியினைப் பெற்றுத் தந்துள்ளார்.

குஜராத் பூகம்பத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரோட்டரி சங்கத்தின் Cloth Bank Chairman என்ற முறையில் இரண்டே நாளில் ரூ.4,00,000/– மதிப்புள்ள ஜவுளியினைப் பெற்று தனி லாரி மூலம் குஜராத் அனுப்புவதற்கு மிகவும் அரும்பாடுபட்டவர்.


சென்னை அம்மையப்பன் தெருவில் உள்ள கொங்கு இல்ல அடி மனை நிலம் வாங்குவதற்குக் கரூரில் நிதி பெற்றுத் தந்துள்ளார்.

கொங்குப் பேரவை மாநிலத் தலைவர் திரு. ஆர். தேவராசன் அவர்கள் தலைமையில் ஈரோட்டில் 2000–ம் ஆண்டு நடைபெற்ற கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையின் மாநிலப் பொதுச் செயலாளராக இருந்து பிரமாண்டமான மாநாட்டை நடத்துவதற்குப் பெரிதும் பாடுபட்டவர்.

“இந்தச் சமுதாயம் முன்னேற வேண்டும்” என்று எப்போதும் குரல் கொடுப்பவர். கொங்கினம் எங்குக் கூடினாலும் அங்கு திரு. அம்மையப்பக் கவுண்டர் இருப்பார். தமிழகம் முழுவதிலும் உள்ள கொங்கு சமுதாயத்தில் இவரைத் தெரியாதவர்கள் இருக்கமாட்டார்கள்.

இந்தக் கருப்பு நிலா வீசும் ஒளி கொங்கினத்தின் மன இருட்டை விடியலாக்கும் விடிவெள்ளியாகத் தொடர வேண்டும். இந்தச் சமுதாயம் அவரை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையுடன் வாழ்த்துவோம்.

## சாதனையாளர்



## திரு. என்.கே. சின்னுசாமி

நாமும் நன்றாக இருக்க வேண்டும் ! நம்மைச் சார்ந்தவர்களும் நன்றாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் திரு. என்.கே. சின்னுசாமிக் கவுண்டர்.

நாமக்கல்லில் திரு. கே. கருப்ப கவுண்டர் – திருமதி செல்லம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர். உயர்நிலைப் பள்ளிப் படிப்பு மட்டும் படித்து விவசாயத்தில் ஈடுபட்ட இவர் போதிய ஊதியம் இல்லாததால், உழவுத் தொழில் சார்புடைய வணிகத் தொழிலில் ஈடுபட்டு முன்னேறியவர். தன்னுடைய முன்னேற்றத்திற்கும் சமுதாயப் பணிக்கும் உறுதுணையாக தனது துணைவியார் திருமதி பாப்பம்மாள் இருக்கிறார் என்று பெருமையாகக் கூறுகின்றார். இவருக்கு இரு மகன்கள், இரு மகள்கள்.

இவரது தந்தை தீவிர காங்கிரஸ் பக்தர். அவரைப்போல எப்போதும் இவர் காங்கிரஸ் தொண்டர். மதிப்பிற்குரிய கர்மவீரர் காமராஜர் அவர்களின் அன்பையும் அரவணைப்பையும் பெற்றவர்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற எண்ணம் உடையவர். நாமக்கல்லில் கொங்கு நண்பர்கள் சங்கம் மற்றும் கொங்கு சார்ந்த அனைத்து அமைப்புகள் அமைப்பதில் பெரும் பங்காற்றியவர்.

நாமக்கல் கொங்கு திருமண மண்டபம் கட்டுவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். நாமக்கல் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் புரவலாராக இருந்து கொங்கு சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருகிறார்.

தாம் அதிகம் படிக்காவிட்டலும் இந்தக் கொங்குச் சமுதாயக் குழந்தைகள் படிக்க வேண்டும் என்பதற்காக கொங்கு இன மக்களின் ஆதரவைத்திரட்டி "கொங்கு

மெட்ரிகுலேஷன் பள்ளி'', "உயர்நிலைப் பள்ளி", "மேல்நிலைப்பள்ளி", "தொழிற் பயிற்சிப்பள்ளி" ஆகியவற்றை நிறுவுவதில் பெரும் பங்கை ஆற்றியவர் இவர். இதனால் ஆயிரத்திற்கும் மேலான கிராமப்புற குழந்தைகள் கல்வி பெற்று வருகின்றனர். சமுதாயப் பணிக்குச் சமமாக ஆன்மீகப் பணியாற்றிவர் திரு.என்.கே சின்னுசாமிக் கவுண்டர். நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் மகா மண்டபம், நாமக்கல் மோகனூர் சாலையில் விநாயகர் கோயில், ஐயப்பன் கோவில், திருச்செங்கோடு சாலையில் விநாயகர் கோயில் ஆகிய கோயில்கள் கட்டுவதில் பங்கெடுத்துக் கொண்டவர். அவருடைய ஆலயத் திருப்பணி இன்றும் தொடர்கிறது.

தன் வாழ்நாள் முழுமையையும் சமுதாயப்பணிக்கும், ஆன்மீகப் பணிக்கும் பகிர்ந்தளித்துப் பணியாற்றி வருகிறார். கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பின் உதவித் தலைவராக இருந்து அறிவுரை வழங்கும் பெரியவராக விளங்குகிறார். அவர்தம் பணி தொடர வாழ்த்துவோம்.

## சாதனையாளர்



## திரு. அரங்க. துரைராஜ்

நாமக்கல் மாவட்டம் செய்யாம்பாளையம் தேவேந்திர குலத்தைச் சார்ந்த காவல்துறை உயர் அதிகாரியாக இருந்த திரு. அரங்கசாமி – ஆசிரியை திருமதி ராஜம்மாள் தம்பதியரின் புதல்வரான அரங்க. துரைராஜ் அவர்கள் எம்.ஏ. இலக்கியம் படித்தவர். மனைவி திருமதி ராஜேஸ்வரி. மகள் பார்வதிக்குத் திருமணமாகிவிட்டது. மகன் கோபிநாத் கல்லூரி மாணவர்.

கர்நாடக கவுண்டர் சேவா சங்கத்தின் தலைவர். பெங்களூரிலே கொங்கு சங்கம் இருப்பதை இந்தச் சமுதாயத்திற்கு, வெளிஉலகுக்குக் காட்டியவர். தலைவராகப் பொறுப்பேற்றதிலிருந்து அந்தப் பதவிக்குப் பெருமை சேர்ப்பவர். அதன் மூலம் கிராமங்களில் உள்ள நமது கொங்கு இனத்தை எப்படியாவது முன்னேற்ற வேண்டுமென்று துடிப்பவர். தலைவர் பதவி அவருக்கொன்றும் புதிதல்ல. 1974–77 ஆம் ஆண்டுகளில் திருச்சியில் கொங்கு மாணவர் சங்கத்தின தலைவராகப் பணியாற்றியவர். அப்போது கொதிக்க ஆரம்பித்த கொங்கு ரத்தம் இன்னும் ஆறவில்லை.

பெங்களூர் மாநகரில் சங்கத்தின் உறுப்பினர்களுக்கான வீட்டு மனைகள் விற்பனைத் திட்டத்தினைத் தொடங்கி பெங்களூர் சங்கத்தின் பொருளாதாரத்தினை பெருமளவில் உயர்த்தியவர்.

கொங்கு இனத்தின் முதல் திருமண இணைய தளத்தினை (www.muhurthakaal.com) ஏற்படுத்தி உலகம் முழுவதும் உள்ள நமது கொங்கு மக்கள் பயன்பெறச் செய்தவர்.

கர்நாடக கவுண்டர் சேவா சங்கத்தின் பெயருக்கேற்ப மாநிலத்தின் ஹிரியூர், பத்ராவதி, கொல்லேகால் சாம்ராஜ் நகரம், மைசூர் போன்ற பல பகுதிகளிலும் அமைப்புக்களை ஏற்படுத்தி சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியவர்.

மனித வாழ்வுக்கு ஆன்மீகம் தேவை என்பதனைக் கருத்தில் கொண்டு பல ஆன்மீகப் பெரியோர்களை நமது கர்நாடக கொங்கு மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர்.

2004 ஜனவரி 25ம் தேதி கொங்குச் சமுதாயத்தின் தேவைக்கு ஏற்ப, பெங்களூரில் நமது சமுதாயப் பெரியோர்களை அழைத்து ஒரு மாபெரும் கருத்தரங்கினை நடத்தி கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பு உருவாகக் காரணமாக இருந்தவர்.

தொழிலதிபர், ஏற்றுமதி இறக்குமதி தொழில் செய்பவர், தொழில் நிமித்தமாக உலகம் முழுவதும் பயணம் செய்பவர். டெக்கான் டிரேடிங் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தின் நிர்வாகப் பங்குதாரர். Earthmoving இயந்திரங்களின் உதிரிபாகங்களை பல அயல்நாடுகளில் (USA, ITALY, GERMANY, CHINA, AUSTRALIA) இருந்து இறக்குமதி செய்து இந்தியா முழுவதும் விநியோகம் செய்பவர்.


“இயற்கை வேளாண்மை நல்லது” என்று நாம் கனவு காணும் இக்காலத்திற்கு முன்பிருந்தே அதை பல ஆண்டுகளாகச் செய்து வருகிறார். இவருடைய “மதர் இந்தியா பண்ணையில்” விளையும் அல்போன்சா மாம்பழங்கள், இதர கனிவகைகள் மற்றும் மூலிகைகளைப் பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறார். “பஞ்சகவ்யா” என்ற சங்ககால இயற்கை வேளாண்மை முறையை உழவர் சமுதாயத்தினரிடம் பரப்பி வருகிறார்.

இளைஞர் சமுதாயத்தை, தன்னுடைய பொறுப்பான செயல்களால், தன்னுடைய உதவி செய்யும் பண்பால், திட்டமிட்டு எதையும் சாதிக்கும் சாதனைகளால் கவர்ந்திழுக்க கூடியவர். அவருக்கு ஒரு ரசிகர் மன்றம் உண்டென்றால் அது மிகையாகாது.

கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பின் செயலாளராகப் பொறுப்புவகிக்கும் திரு. துரைராஜ் அவர்கள் தீரன் சின்னமலை அறக்கட்டளையின் அறங்காவலராகவும் உள்ளார்.

தான் சாதித்த சாதனைகளால் மனநிறைவடையாத திரு. அரங்க துரைராஜ் சாதிக்க நினைப்பது : “வருங்காலத்தில் உலகம் முழுவதும் வியாபித்துள்ள நமது கொங்கு சமுதாய அறிவு ஜீவிகளை ஒன்று திரட்டி ஒரு சர்வதேச கொங்கு அமைப்பினை நிறுவி, நமது கொங்குச் சமுதாயத்தினை உலகின் ஒரு தலை சிறந்த இனமாக உருவாக்க வேண்டும்” என்பதாகும்.

# சாதனையாளர்



## சேர்மன் ஆர். நடேசன்

அரசியல் சாக்கடை, அரசியலில் உள்ளவர்கள் ஆகாதவர்கள், ஒன்றுக்கும் உதவாதவன் போகும் துறைதான் அரசியல் என்பதெல்லாம் எப்போதும் உண்மை ஆவதில்லை. அந்தக் கால அரசியல்வாதிகள் போல இன்று யாரும் இல்லை என்ற கூற்றும் மெய் ஆவதில்லை சில சமயம். அப்படித் தப்பிப் பிறந்தவர்தான் திருச்செங்கோடு நகர்மன்றத் தலைவர் திரு. ஆர். நடசேன் அவர்கள்.

1986 முதல் 1991 முடிய திருச்செங்கோடு நகராட்சியில் நகர் மன்ற உறுப்பினராகப் பணிபுரிந்தவர். மக்கள் நம்பிக்கை வைத்த காரணத்தினால் தொடர்ந்து 1996 முதல் இன்றுவரை நகர்மன்றத் தலைவராக இருந்து வருகின்றார். அவரை அணுகி அவரிடம் பழகுபவருக்குத் தெரியும் அவர் ஒரு வித்தியாசமான அரசியல்வாதி என்று. திருச்செங்கோட்டுப் பகுதிகளிலே அவர் செய்யும் சேவை கணக்கில் அடங்காதவை. கொங்கு மண்டலத்திலே நகர்மன்றத் தலைவராக இருக்கின்ற காரணத்தினால் அவர் செய்யும் பணிகள் ஒரு எழுதப்படாத வரைமுறையாக பெரும்பாலும் அது கொங்கு சமுதாயத்தைச் சென்று சேர்க்கிறது.

திரு. நடேசன் அவர்கள் கட்சிப் பாகுபாடு பார்க்காமல், சாதி, சமய பாகுபாடு பார்க்காமல், ஏழை, எளியோர் பாகுபாடு பார்க்காமல் கொங்கு மண்டல மக்களுக்காகப் பாடுபடுபவர்.

நாமக்கல் மாவட்டம் புதுப்புளியம்பட்டி சேரன் கூட்டத்தைச் சார்ந்த ராமசாமிக் கவுண்டர் – பெருமாயி தம்பதியினருக்கு 1957 ஆம் ஆண்டு பிறந்தவர். மனைவியின் பெயர் என். ரேவதி. ஒரு மகனும், மகளும் கல்லூரியில் படிக்கின்றார்கள்.

இவர் நகர் மன்றத் தலைவராகப் பதவி வகிக்கும் தருணத்தில் 3¼ கோடி ரூபாய் செலவில் திருச்செங்கோட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டினார். விவசாயிகளின்

நலனுக்காக காய்கறி மார்க்கெட் கட்டினார். திருச்செங்கோட்டின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு பள்ளி பாளையத்தில் இருந்து 14.4 கோடி ரூபாய் செலவில் புதியதாகக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தினார்.


அந்தக்கால அரசர்கள் சாலைகளில் மரம் நாட்டார்கள்; குளம் வெட்டினார்கள்; அணை கட்டினார்கள்; கோயில் கட்டினார்கள். இவர் விவசாயிகளின் நலனுக்காக காய்கறி மார்க்கெட் கட்டினார். திருச்செங்கோட்டின் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு பள்ளிப் பாளையத்தில் இருந்து 14.4 கோடி ரூபாய் செலவில் புதியதாகக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தினார்.

அந்தக்கால அரசர்கள் சாலைகளில் மரம் நாட்டார்கள்; குளம் வெட்டினார்கள்; அணை கட்டினார்கள்; கோயில் கட்டினார்கள் என்றெல்லாம் வரலாற்றில் படிப்போம். “அரசாண்ட பரம்பரை கொங்குச் சமுதாயம், ஆளப் பிறந்தவர்கள் கொங்குக் குலமக்கள்” என்று பறைசாற்றிக் கொள்ளும் அந்தக் கொங்குத் தாயின் வயிற்றிலே கருவுற்றதன் காரணத்தினாலே, தானும் மழைநீரைச் சேகரிக்க குளம் வெட்ட வேண்டும் என்று திருச்செங்கோடு புதிய பஸ் நிலையம் அருகில் ஒரு குளத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். இப்படி ஊருக்கு ஊர் அனைவரும் குளம் வெட்டக் கிளம்பினால் தண்ணீர் பஞ்சம் தலை காட்டாது.

“கொங்குச் சமுதாயம் இந்த நாட்டின் ஆட்சிக் கட்டிலிலே உள்ள கயிறுகளாக மாறினால் இந்த நாடு முன்னேற்றம் பெறும். கையூட்டு குறையும் ஏழை என்ற சொல்லே இல்லாமல் ஆகும். அனைத்து ஜாதியினரையும் அரவணைத்துடச செல்லும் பண்பாடு பெருகும்” என்று நாம் காணும் கனவெல்லாம் இப்படி திரு. நடேசன் போன்றவர்கள் ஆற்றும் நற்பணிகளால் உறுதிப்படுத்தப்படுகிறது.

இன்று திருச்செங்கோடு நகர்மன்றத் தலைவராக உள்ள திரு. நடேசன் அவர்கள் மேன்மேலும் வளர்ந்து மொத்தத் தமிழகத்திற்கும் பணியாற்றக் கூடிய வாய்ப்பினைப் பெற வேண்டும். அப்போது இந்தக் கொங்கு சமுதாயத்தின் நேர்மை, நாணயம், நம்பிக்கை, கடின உழைப்பு என்றும் போல பாராட்டப்பட வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

## சாதனையாளர்



## சேலம். திரு. கே. கருப்பையா

பெரியவர் திரு. கே. கருப்பையா நாமக்கல் அருகே உள்ள வேலகவுண்டன்பட்டி புதூரில் **1928**ம் ஆண்டு மணியன் குல திரு. குமாரசாமிக் கவுண்டர் – திருமதி பழனியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். "நீலா டிரான்ஸ்போர்ட்ஸ்" என்ற பெயரில் பேருந்து நிறுவனத்தைச் சேலத்தில் வருகிறார். சேலத்தில் கொங்கு நண்பர்கள் சங்கம் உருவாகக் காரணமாக இருந்தவர்களில் இவரும் ஒருவர்.

**1954–55**ம் ஆண்டுகளில் இலங்கைத் தமிழர்கள் தாயகம் வந்து திருமணச் சடங்குகளைச் செய்து வந்தனர். இவருடைய முயற்சியால் இங்கிருந்து அருமைக்காரரை இலங்கைக்கு அழைத்துச் சென்று நமது மரபுப்படி திருமணங்கள் நடத்தப்பட்டன.

உடல் தளர்ச்சியும், முதுமையும் அவரது பொதுப்பணிகளுக்குத் தடையாக என்றுமே இருந்ததில்லை. தேனீ போல் மற்ற நண்பர்களுடன் ஒருங்கிணைந்து "சேலம் கொங்கு வேளாளர் அறக்கட்டளையை" வளர்த்ததில் பெரும்பங்காற்றியவர்.

சேலத்தில் ஆரம்பிக்கப்பட்ட "கொங்கு மெட்ரிகுலேசன் பள்ளியில்" முதல் நான்காண்டு காலம் அதன் தாளாளராகப் பணியாற்றியவர். அன்று அந்தப் பள்ளியை ஆரம்பித்து இன்று பலகோடி ரூபாய் மதிப்பிற்கு வளர்ந்திருக்கப் பணியாற்றியவர்களில் முக்கியமானவர். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பணிகளுக்காக நிதியுதவி வழங்கியவர்.

கொங்குச் சமதாயத்திற்குத் தொழில்முறை அறிவுரை கூறும் பல்கலைக் கழகம் இவர். சுய விளம்பரம் கொஞ்சமும் இன்றிச் சமுதாயப் பணி ஆற்றும் ஒரு செயல்வீரர். இவருடைய அமைதி, அரவணைத்துப் போகும் பாங்கு, வழிகாட்டும் நற்பண்பு ஆகியவை கொண்ட வாழ்க்கை முறை, கொங்கு இளைஞர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளாகும்.


தான் ஈடுபட்ட தொழில்களில், தான் பெற்ற அனுபவங்களை மற்ற நிகழ்கால இளைஞர்களுடன் பகிர்ந்து கொண்டு அவர்களும் அத்தொழிலை மிகச்சிறப்பான முறையில் செய்வதற்கு உறுதுணையாக இருப்பவர்.

“தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு

ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.”

இக்குறளுக்கேற்ப, இறந்த முன்னோர், இறைவன், விருந்தினர், சுற்றத்தினர், தான் என்ற ஐந்து திறத்தினரும் பலன் பெறுமாறு தன் வருவாயைப் பகுத்து பயன்படுத்துபவர். பிறருடன் நற்பண்புடையவராய் மனம் கலந்து பேசி மகிழும் திறமையுள்ளவர். பொன்னான கருத்துக்கள், பழக்கங்களோடு வாழ்பவர். பலரது வாழ்விற்கு வழி வகுத்தவர். மேலும், பலரது வாழ்வுயர ஆலோசனைகளை வழங்கி ஊன்று கோலாகத் திகழ்பவர். சமுதாயப் பணிகளைச் செவ்வனே செய்பவர். அன்னாரின் இப்பணிகள் மேன்மேலும் சிறக்க சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் தன் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## சாதனையாளர்



## திரு. தே.ப. சின்னசாமி

கொங்கிலே பிறந்த கவிஞர்கள் பலர் ; அதிலே குறிப்பாகக் கொங்கு முரசு கொட்டியது சிலர். அந்த வகையிலே தன் படைப்புகள் அனைத்தையும் கொங்கினத்தின் வரலாறு பற்றியும், வாழ்க்கை முறை பற்றியும் முன்னேறும் வழிபற்றியுமே முன்னிறுத்தி உருவாக்கியவர் புலவர். தே.ப. சின்னசாமி அவர்கள்.

இவர் ஒரு சிறந்த தமிழாசிரியர், எழுத்தாளர், ஆராய்ச்சியாளர், தமிழ் மருத்துவர். 67 வயதான புலவர் தே.ப. சின்னசாமி அவர்கள் M.A., M.Ed., படித்து 36 ஆண்டுக்காலம் கல்விப் பணியாற்றியவர். நாமக்கல் மாவட்டம் காந்திநகரைச் சேர்ந்தவர். சித்த மருத்துவத்திலும் சிறந்த மருத்துவராகத் திகழ்பவர். செம்பூத்தான் குலத்திலே பிறந்த இவர் திரு. பழனியப்பன் – திருமத காளியம்மள் தம்பதியினரின் மூத்த மகனாகப் பிறந்தவர். ஏழு வயதிலேயே தந்தையை இழந்து, தாயின் கடும் உழைப்பினால் முன்னுக்கு வந்தவர். இவருடன் கூடி உழைத்தவர் திருமதி காளியம்மாள். ஆஸ்திக்கு வெற்றிவேலன். ஆசைக்கு பாரதி. இதயநோய் முதல் எய்ட்ஸ் வரை சித்த மருத்துவ மூலிகைகளால் தீர்க்கப்பட இயலாத நோய்களே இல்லை என்ற உறுதியுடனும் நம்பிக்கையுடனும் மருத்துவம் செய்து வருகிறார்.

“கொங்கு வேளாளர் இனத்தில் பிறந்ததே புண்ணியம்தான்” என்று ஊர் முழுக்கக் கூறிவரும் புலவர், கொங்குச் சமுதாயம் பற்றி பலவகையான நூல்களை எழுதி கொங்கு வேளாளரின் புகழ் இந்தப் பாரிலே பரவக் காரணமாக இருந்து கொண்டிருக்கிறார். “கொங்கு மண்ணின் மைந்தர்கள் கொங்கு வேளாளர்களே” என்பதற்கான ஆதாரப்பூர்வமான ஆய்யுக் குறிப்புகளை, தேடி எடுத்து இந்த உலகிற்கு உணர்த்தி வருகிறார்.

**அவர் எழுதிய கொங்க வேளாளர் பற்றிய நூல்கள் :**

1. கொங்கு வேளாளர் சடங்குகளில் பண்பாடு, **2.** கொங்கு கவுண்டர் வரலாறு, **3.** தீரன் சின்னமலை வரலாறு, **4.** கொங்கு நாட்டு வரலாறு, **5.** காக்காவரி அண்ணமார் – தலபுராணம் – விளையன் குலம் **6.** மோகனூர் நவலடியான் – செல்லாண்டியம்மன் (மணியன்) தலவரலாறு, **7.** பொன்னாச்சியம்மன் – தலவராலாறு (செம்பூத்தான்) **8.** பெரியகாண்டியம்மன் (கடாரம்) பொருள்தந்த குலம் **9.** கரூர் நாகமல்லி மணைக்கருப்பன் கோயில் தலபுரானம் (அந்துவன்), **10.** மோரூர் நல்லபுள்ளியம்மன் தலபுராணம் (கண்ணந்தை குலம்) **11.** கொங்கு வேளாளர் திருமணச் சடங்குகள்.

**முக்கிய மருத்துவ நூல்கள் :**

**1.** திருக்குறளில் மருத்துவம், **2.** நோயின்றி வாழ, **3.** நோயும் மருந்தும், **4.** உணவே மருந்து, **5.** தமிழ்நாட்டு மருந்துவம், **6.** மூலிகைகளின் மருத்துவப் பயன்கள், **7.** கொல்லிமலை மூலிகைகளின் மருத்துவப்பயன், **8.** குட்ட நோயும் மருத்துவமும், **9.** எய்ட்ஸ்நோய் – விளக்கம், **10.** நாடியும் நோய் அறிதலும், **11.** திருச்சி வானொலியில் – தொடர் சொற்பொழிவு ஆண்டுக்கொருமுறை.

இவர் ஆற்றிய பணிகளுக்கும், சமுதாயச் சேவைகளுக்கும் பல்வேறு இடங்களில் பல்வேறு அமைப்புகள் மூலம் பல விருதுகளை பெற்றிருந்தாலும், தம்முடைய தமிழ்ப் பணியால், தான் பிறந்த இந்தச் சமுதாயத்தை மனதில் கொண்டு கொங்கு இனத்தின் சிறப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நாம் பிறந்த கொங்கு இனப் புகழை பரப்பிவரும் புலவர். தே.ப. சின்னசாமி அவர்களுக்கு, “கொங்கு நண்பர்கள் சங்கம் ‘சாதனையாளர்’ விருது வழங்கி மகிழ்கிறது.

## சாதனையாளர்



## டாக்டர். கே.எஸ். பழனிசாமி

முனைவர் கே.எஸ். பழனிசாமி அவர்கள் ஈரோடு மாவட்டம் கல்வெட்டுப்பாளையம் தூரன் குலத்தைச் சேர்ந்த மிகவும் எளிய விவசாய குடும்பத்தினரான திரு. கே.எம். சொங்கப்ப கவுண்டர் – திருமதி ஜானகி தம்பதியினருக்கு 1943–ம் ஆண்டு பிறந்தார். இவருடைய வாழ்க்கைத் துணைவி திருமதி சம்பூரணம். இவருக்கு இரண்டு மகள்கள்.

கால்நடை மருத்துவத்தில் முதுகலை பட்டம் பெற்ற இவர் முதலில் கல்லூரி விரிவுரையாளராகச் சேர்ந்து பின்னர் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கழகத்தில் (ஆவின்) நுண்ணுயிர் வல்லுனராகப் பணியாற்றினார். நாமக்கல் பகுதியிலிருந்து பதப்படுத்திய பாலுக்குப் பதிலாகக் குளிரூட்டிய பாலைக் கெடாமல் முதன்முறையாக சென்னைக்கு கொண்டு வந்து சாதனை படைத்தவர்.

1983–ம் ஆண்டு முனைவர் (Ph.D.) பட்டம் பெற்ற இவர் கால்நடை மருத்துவக் கல்வியில் பல உயர்ந்த பதவிகளில் இருந்தவர். மும்பையில் உள்ள பாபா கதிரியக்க ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் உலகக் கதிரியக்கக் கூட்டத்தின் அழைப்பின்பேரில் ஆஸ்திரிய நாட்டில் வியன்னாவில் நடந்த வல்லுனர்கள் கூட்டத்திற்குச் சென்று கருத்துப் பரிமாற்றத்தில் கலந்து கொண்டு மதிப்பைப் பெற்றவர். 60க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டவர்.


கோழிக்கு வெப்பத்தைத் தாங்கும் வாய்வழி "ராணிகட்" தடுப்பு மருந்து கண்டுபிடித்த பெருமையில் இவருக்குப் பங்குண்டு. தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் முதன்மை விஞ்ஞானியாகத் திகழ்ந்த இவர் "ஆட்டுக்கொல்லை" நோய்க்கு முதன்முறையாக இந்தியாவில் தடுப்பு மருந்து கண்டுபிடித்தது இவருடைய சாதனைகளின் மகுடமாக அமைந்தது. பணியில் இருந்து ஓய்வு பெற்றபோதும் பல்வேறு கால்நடைப் பராமரிப்பு மற்றும் விவசாய ஆராய்ச்சி ஆய்வுக் குழுக்களில் இடம்பெற்று ஆலோசனை வழங்கும் இவருடைய சாதனைகள் இன்றும் தொடர்கிறது.

அனைத்திந்திய அறிவியல் சங்கங்களின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். கொங்குச் சமுதாயத்திலே ஓர் ஏழை, எளிய விவசாயக் குடும்பத்திலே பிறந்த இவர் கால்நடைத் துறையிலே இந்த அளவிற்கு சாதித்திருப்பது ஆச்சர்யப்படக்கூடிய விஷயம் இல்லை. பிறந்து வளர்ந்தபோதே கால்நடைகளுடன், தோழிகளுடன் விவசாயக் கழனியிலேயே விளையாண்டவர். அப்படி வாழ்நாள் முழுவதும் வாயில்லா ஜீவன்களுடன் பழகிய இவர் நன்றாகப் பேசக்கூடியவர். அடுத்தவர்களுக்கு தான் உதவியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியவர். இன்று அண்ணாநகர் மேற்கு விரிவாக்கப் பகுதியில் உள்ள சொந்தங்கள் ஒன்று கூடுவதற்காக உள்ள கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உதவித் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

“டாப்லைட் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை” என்ற ஏழை எளிய மாணவர்களுக்கு உதவும் ஓர் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலராகப் பொறுப்பு வகித்து மாணவ மாணவிகளுக்கு உதவித் தொகையை வழங்கி வருகிறார்.

“டாக்டர். திரு. கே.எஸ். பழனிசாமி அவர்களின் கல்விச்சேவை தொடர்ந்து நடைபெற வேண்டும் ; பள்ளி, மாணவ, மாணவிகள் அதன் மூலம் பயன்பெற வேண்டும்; அவர்தம் பணி தொடர நீண்டநாள் வாழ வேண்டும்” என்ற வாழ்த்தி பாராட்டுகிறோம்.

## சாதனையாளர்



# பேராசிரியர் டாக்டர் P. கந்தசாமி

பேராசிரியர் டாக்டர் பி. கந்தசாமி அவர்கள் ஈரோடு மாவட்டம் சங்கராண்டாம்பாளையத்தில் 09.10.1932 அன்று பிறந்தார். காடை குலத்தைச் சேர்ந்த இவருக்கு திருமணமான 4 பெண்கள் உள்ளனர். இவருடைய மனைவி திருமதி. பொன்னம்மாள் ஓய்வு பெற்ற அரசு பள்ளி ஆசிரியை ஆவார்.

சென்னை லயோலா கல்லூரியில் 1955ம் வருடம் B.A (Hons) படிப்பில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றார். பேராசிரியர் டாக்டர் பி. கந்தசாமி அவர்கள் P.S.G. கலைக்கல்லூரியிலும், கோவை P.S.G. பொறியியல் கல்லூரியிலும் 1991–ம் வருடம் வரை கணித விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

பின்னர், கோவை குமரகுரு பொறியியல் கல்லூரியிலும், காருண்யா பொறியியல் கல்லூரியிலும் பேராசிரியராகப் பணியாற்றியவர். 73 வயது நிரம்பிய பேராசிரியர் அவர்கள் இன்றும் தொடர்ந்து அமிர்தா பொறியியல் கல்லூரியில் வருகைப் பேராசிரியராகத் தன் பணியைத் தொடர்கிறார்.

கொங்கு இனத்திற்கு இவர் ஆற்றிய பணிகளுக்காக 2003–ம் ஆண்டு அருட்செல்வர் தலைமையில் கோவை மாவட்ட கொங்கு நற்பணி மன்ற அறக்கட்டளை இவரைப் பாராட்டி பெருமை செய்தது.

அறிவியல் மாத இதழ் “கலைக்கதிரில்” கணிதம், விஞ்ஞானம் சம்பந்தமாக பல கட்டுரைகளை எழுதியுள்ளார். கணிதத்தில் இதுவரை 24 பாடநூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய கணிதப் பாடநூல்கள் கலைக்கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும் தமிழகத்தில் மட்டுமல்லாமல் கர்நாடக மாநிலத்திலும் உபயோகப்படுத்தப்படுகிறது.

துணைவேந்தர் டாக்டர் பாலகுருசாமி, முன்னாள் துணைவேந்தர். ஆர்.எம். வாசகம், தொழிலதிபர் கல்வியாளர் திரு. சிவஞானம் போன்வர்கள் இவருடைய


மாணவர்கள். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பாகவே கோவையில் கல்லூரி ஆசிரியர்களை, வழக்குரைஞர்களை ஒன்று சேர்த்து கொங்கு நற்பணி மன்றம் உருவாக்குவதில் பெரும்பங்கு ஆற்றியவர். டாக்டர் என்.எஸ் பழனியப்பன், நீதியரசர் செங்கோட்டுவேல் டாக்டர். ஆறுச்சாமி போன்றோர் இம்மன்றத்தின் தலைவர்களாக இருந்தபோது இணைந்து பணியாற்றியவர்.

கொங்குச் சமுதாயம் பிற்பட்ட வகுப்பாக ஆனதில் திருப்புமுனையாக இருந்த கோவை கொங்கு மாணவர் பேரணியில் மிக ஈடுபாட்டோடு பங்கெடுத்துக் கொண்டவர்.

மறைந்த தலைவர் கோவை செழியன் தலைமையின் கீழ் கொங்குப் பேரவையில் இணைத்துக் கொண்ட இவர் கோவை மாவட்டப் பொருளாளராகத் தொடர்ந்து இருந்து வருகிறார். பேரவையின் மூலம் திருமணத் தகவல் மையம் நிறுவி. அதில் முழுநேர ஜோதிடரை அமர்த்தி அதன் தலைவராகப் பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர்.

இன்றும் திருமணத் தகவல்களுக்கு இவர் ஒரு **கொங்குப் பெட்டகம்.** இந்த வயதிலும் சுறுசுறுப்பு, எளிமை, இனிமை, பிறருக்கு உதவும் தன்மை, அநியாயத்தைத் தட்டிக் கேட்கும் ஆதங்கம் ஆகியவற்றில் சோடை போகாமல் ஏழை, எளிய மக்களை இன்முகத்தோடு அணுகும் மனப்பான்மை கொண்டவர். கொங்கு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை வாங்கிப் கொடுப்பதில் பெரும்பங்காற்றியவர். அன்னாருடைய சமுதாயப்பணி தொடர்ந்து நமது இனத்திற்குக் கிடைக்க வேண்டிக் கொண்டு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அவரை வாழ்த்துகிறது.

## சாதனையாளர்



## சிந்தனைக்கவிஞர் கவிதாசன்

நம்பிக்கைதான் வாழ்க்கை. நம்பிக்கை இல்லையெனில் வாழ்க்கையில் மட்டுமில்லை, எதிலுமே ஜெயிக்க முடியாது. தன்னம்பிக்கை ஒன்றுதான் மனிதனுடைய கனவை நனவாக்குகிறது ; லட்சியங்களை வெற்றியாக்குகிறது. முயற்சியின் முதல்படியே நம்பிக்கைதான்.

சொந்த வாழ்க்கையாக இருந்தாலும், அலுவலகப் பணியாக இருந்தாலும் பொதுக்காரியமாக இருந்தாலும். இரு நாடுகளுக்கு இடையேயான சமாதானப் பேச்சாக இருந்தாலும், ஒரு நாட்டின் மீது போர் தொடுத்தாலும், எதற்குமே முடிவெடுக்கும் இடத்தில் இருப்பவர்களுக்கு மனம் அதற்குத் தக்கவாறு இருக்க வேண்டும். அப்படி அந்த மனதைப் பண்படுத்தி சரியாக வைத்திருந்தால்தான் எடுக்கின்ற காரியங்களில் வெற்றி அடைய முடியும். எந்த ஒரு நிலைக்கும் மனதைத் தயார் நிலையில் வைத்திருக்க அதற்கான பயிற்சிகளை எப்படிச் செய்ய வேண்டுமோ, அதை முறையாகச் செய்திருக்க வேண்டும்.

“சோம்பிக்கிடந்தால் சிலந்தியும் உன்னைச் சிறை பிடிக்கும்”,”எழுந்து நடந்தால் எரிமலையும் உனக்கு வழி கொடுக்கும்”. இந்த வசீகர வரிகளுக்கு, மந்திர வரிகளுக்குச் சொந்தக்காரர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன்.

கோவை மாவட்டத்தில் மதுக்கரை அருகே உள்ள க.க.சாவடி என்ற அழகிய கிராமத்தில் திரு. சுப்பண்ண கவுண்டர் – திருமதி மயிலாத்தாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். பள்ளிப் பருவம் முதல் தமிழ் மொழியின் மீதும் இலக்கியத்தின் மீதும் தணியாத காதல் கொண்டு கவிதைகள், கட்டுரைகள், கருத்தரங்குகள், மேடைப் பேச்சுகள், பட்டி மன்றங்கள் என பல நிகழ்ச்சிகள் மூலம் தனது சீரிய சிந்தனையைக் கொங்கு மண்டலத்திலே விதைத்து வருகின்ற சிந்தனையாளர்.

பி.ஏ. பட்டப்படிப்பில் சென்னைப் பல்கலைக் கழகத்திலே முதல் மாணவராகத் தேறி, தொடர்ந்து பேரறிஞர் அண்ணாவைப் போல மூன்று முறை எம்.ஏ. பட்டம் பெற்றவர். இன்று கோவை ரூட்ஸ் நிறுவனங்களின் மனிதவள மேம்பாட்டுத்துறையின் தலைவராகப் பணிபுரிந்து கொண்டே தனது பொதுச் சேவையை ஆற்றி வருகிறார். தன்னம்பிக்கை அறக்கட்டளையின் நிறுவனராகவும் தொழிலாண்மை சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளிலும் கௌரவப் பயிற்சியாளராகவும், கோவை மனிதவள மேம்பாட்டுத் துறையின் தலைவராகவும் செயல்பட்டு வருகிறார். பாரதியார் பல்கலைக்கழகத் திட்டக்குழு உறப்பினராக மேதகு தமிழக ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டார்.

மாணவப் பருவம் முதலே இவர் எழுதிய புதுக்கவிதைகளையும் இலட்சியக் கவிதைகளையும் இங்குப் பட்டியலிட ஆரம்பித்தால் இருக்கும் இடம் போதாது. ஊர் ஊருக்கு நடத்தும் தன்னம்பிக்கை பயிலரங்கங்கள் கிராமப்புறங்களில் உள்ள மனிதச் சமுதாயத்திற்கு நம்பிக்கை ஊட்டி, வெற்றியின் திசையில் அவர்களைத் திருப்பிவிட்டுள்ளன. தன்னலமற்ற இவரது சேவையைப் பாராட்டி "அமெரிக்கன் பயோகிராபிக்ஸ் இன்ஸ்டிடியூட்" என்ற நிறுவனம் "2000–ம் ஆண்டில் சிறந்த மனிதர்" என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

இவர் படைத்த "கருவறை ஓலங்கள்" என்னும் கவிதை இவரது கவிதைப் பயணத்தில் ஒரு மைல்கல். இது இந்திய அளவில் புகழ்பெற்று நமது குடியரதின விழாவையொட்டி அனைத்து மொழிக்கவிஞர்கள் முன்னிலையில் பாராட்டப் பெற்றது.


கோவை P.S.G. கல்வி நிறுவனங்களின் சிறந்த முன்னாள் மாணவர் என்ற விருதினை ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்களிடம் இருந்து பெற்றிருக்கிறார்.

இளைஞர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் சேவைக்காக "ஜெம் ஆப் கோயமுத்தூர்" என்ற விருதையும் பெற்றுள்ளார்.

''லட்சியவாதிகளை உருவாக்குவதே எனது லட்சியம்'' என்று சாதாரண மனிதர்களை சாதனையாளர்களாக உருவாக்கி வரும் இவருடைய நூல்களான ''மனிதவளச் சிந்தனைகள்","வானம் வசப்படும்","காற்றின் கவிதை" ஒவ்வொருவரும் படிக்கத் தவற விடக் கூடாதவை.

முயற்சியும், பயிற்சியும் இருந்தால் சாதாரண மனிதனும் சாதனையாளர் ஆகலாம் என்று நம்பிக்கையூட்டும் இவருக்கு சாதனையாளர் விருது வழங்கி மகிழ்கிறோம்.

# சாதனையாளர்



## டாக்டர். பி. ஏகநாதன்

உழவுத் தொழிலை முதன்மையாகக் கொண்டு அதையே உன்னதமாகக் கருதும் விவசாய சமுதாயம்தான் கொங்கு சமுதாயம். தான் பிறந்த இந்த மண்ணுக்கு, அதிலே விளையும் பொருட்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து, விவசாயத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளை நடத்துபவர்கள் ஒரு சிலர்தான். ஏர்பிடித்த கைகளிலே தவழ்ந்த டாக்டர். திரு. ஏகநாதன் அவர்கள் இந்தத் துறையைத் தேர்ந்தெடுத்ததில் ஆச்சர்யமில்லை.

ஈரோடு மாவட்டம், பெரிய சேமூர், சிறப்புநிலை பேரூராட்சி தண்ணீர்ப்பந்தல் கிராமத்தில் வசித்து வரும், சிறிய பூர்வீக விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த கண்ணன் குலத்தைச் சேர்ந்த அமரர் பழனிச்சாமி கவுண்டர் – திருமதி செல்லாயம்மாள் அவர்களது 2–வது மகனாகிய **26.08.1966**

முதற்படிப்பாக கிராமப்பள்ளியில் படிப்பைத் தொடங்கி, படிப்படியாகத் தேர்ச்சி பெற்று வேளாண் துறையில் (Ph.D) டாக்டர் பட்டம் பெற்று, சென்னை M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையில் தலைசிறந்த முதன்மை விஞ்ஞானியாகப் பணியாற்றி வருகிறார். எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து தனது அறிவு ஆற்றலினால் இன்று உயர்ந்த நிலையில் இருக்கும் நமது இனத்தைச் சார்ந்த டாக்டர் பி. ஏகநாதன் அவர்கள் விவசாயத் துறையில் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து உலகெங்கும் புகழ் பெற்று கொங்கு இனத்திற்குப் பெருமை சேர்த்து வருகிறார்.

இவரது முதல் ஆராய்ச்சிப் பணியாக தமிழக வனத்துறைக்கு உட்பட்ட (நீலகிரி – கூடலூர்) மரபணு சேகரிப்பு மையத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் அழிந்து வரும் வனத் தாவரங்களை இனம் கண்டறிந்து, பாதுகாப்பு மற்றும் நிர்வாக முறைகளை இரண்டு வருட **(1994–1996)** ஆராய்ச்சிக்கு பிறகு வனத்துறைக்கு கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டது.

1996 முதல் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் கடலோரப் பகுதி வனம் மற்றும் விவசாயம் பற்றி ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்து கடல்நீரை விவசாய பாசன முறைக்கு உபயோகப்படுத்துவது பற்றி கண்டறிந்து பரிந்துரை செய்திருக்கிறார்.

வறட்சியான மற்றும் நிலத்தடி நீர் குறைவாக உள்ள பகுதிகளுக்கு ஏற்ற புதியவகை பயிர்களை உருவாக்கி அதிக வருவாய் ஈட்ட வழிவகை செய்யும் முறை கண்டறியப்பட்டதில் பெரும்பங்காற்றினார். மாறிவரும், காலநிலை, பருவமாற்றம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு மரபணுக்களை ஆராய்ந்து விவசாய உற்பத்தியைப் பெருக்குவது பற்றி ஆய்வில் ஈடுபட்டுள்ளார்.

ஜப்பான், தென்கொரியா, மலேசியா, தாய்லாந்து, வளைகுடா நாடுகள் மற்றும் இதர நாடுகளுக்குப் பயணம் செய்து இயற்கைவள மேம்பாடு மற்றும் மேலாண்மைக்கு உதவி புரிந்திருக்கிறார்.


இவர்தம் ஆராய்ச்சியின் மூலம் உணவுப்பொருட்கள் உற்பத்தியைப் பெருக்கி, இந்நாட்டின் தன்னிறைவுக்குப் பாதை அமைக்கிறார். அதிநவீன தொழில்நுட்ப விவசாய உத்திகளைப் பயன்படுத்தும் முறைகளை முனைப்புடன் செயல்படுத்த வழிவகை செய்து வருகிறார். பசிப்பணி இந்நாட்டிலிருந்து முற்றிலும் நீக்கப்படவேண்டும் என்பதற்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துப் பணி செய்வதையே கடமையாகக் கொண்டுள்ளார்.

நமது அற்புத விஞ்ஞானி இந்திய நாட்டின் ஜனாதிபதி அவர்களிடம் பாராட்டுகளைப் பெற்றிருக்கிறார். தனிப்பட்ட முறையில் திரு. எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுடைய அன்பிற்குப் பாத்திரமானவர். பல வெளிநாடுகளில் இருக்கின்ற விவசாய அறிஞர்களுடன் தொடர்புடையவர். நெருங்கிப் பழகுபவர். அவர் இந்த மண்ணிற்குச் செய்யும் சேவையை, அதாவது விவசாயத்திற்கு விவசாய வளர்ச்சிக்கு ஆற்றுகின்ற பணி நமமைப் பொறுத்தவரை கொங்கு சமுதாயத்திற்கு நேரடியாகப் போய்ச் சேர்கிறது.

இந்திய அளவிலே, உலக அளவிலே இவர் வாங்கியிருக்கின்ற பட்டங்களுக்கும், பதக்கங்களுக்கும் அளவில்லை. அப்படி உலகமே பாராட்டும் இந்த விஞ்ஞானியை நாம் பாராட்ட தாமதம் செய்யக்கூடாது.

வாழ்க அவருடைய சேவை – வளர்க அவருடைய ஆராய்ச்சி.

# சாதனையாளர்



## போஸ்ட். பி. முத்து

இவர் 5ம் வகுப்பு வரையே படித்தவர். 1944ல் தபால்தந்தி இலாகாவில் உதவியாளராய் வேலைக்குச் சேர்ந்தவர். கொங்கு இனத்திற்கே உரித்தான கடுமையான உழைப்பினாலும், விடாமுயற்சியாலும் பதவி உயர்வுகளைப் பெற்று, அந்தத் துறையில் பலவிதமான சங்கப் பொறுப்புகளைத் திறம்பட வகித்து நற்பெயர் பெற்றவர். "போஸ்ட்" என்ற பெயர் ஏன் வந்தது என்பதற்கு இதைவிட விளக்கம் தேவையில்லை. 1987ல் ஓய்வு பெற்றார்.

அரசு வேலையிலிருந்த ஓய்வு பெற்றாரே ஒழிய அவருடைய வேலைகள் ஓயவில்லை. சமுதாயப் பணியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இன்றுவரை அவர் ஆற்றிக் கொண்டிருக்கின்ற நற்பணிகள் அவர் இளமைக்காலத்தில் செலவிட்ட நேரத்தைவிட இப்பொழுது அதிக நேரம் உழைக்கிறார் என்பது புரியும்.

**வகிக்கும் பொறுப்புகள் :**

1. கரூர் மாவட்ட கொங்கு வெள்ளாளர் தர்ம அறக்கட்டளையின் செயலாளர். 2. கொங்கு வெள்ளாளர் திருமண மண்டபம், கொங்கு கல்வி அறக்கட்டளையின் நிர்வாக சபை உறுப்பினர். 3. கரூர் மாவட்ட கொங்கு நண்பர்கள் சங்கத் துணைத் தலைவர். 4. கரூர் மாவட்ட கொங்குப் பேரவை பொருளாளர் 5. டாக்டர்.வா.செ. குழந்தைசாமி கல்வி அறக்கட்டளையின் ஆலோசனைக்குழு உறுப்பினர்.

**சாதனைகள் :**

1. 1969ல் சின்னகுளத்துப் பாளையத்தில் பொதுமக்களிடம் வசூல் செய்து, ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில், ஸ்ரீ பகவதியம்மன் கோயில் கட்டுவதில் முக்கியப் பங்கு வகித்தார்.

2. 1975ல் கோவையில் திரு. மன்றாடியார் அவர்கள் தலைமையில் கொங்கு வேளாளர் சமூக நலமன்றம் நடத்திய வெள்ளைப்புடவை இயக்கத்தில் முக்கியப் பங்கு கொண்டார்.

**3.** மேலும் **1989**ல் அமராவதி ஆறு பள்ளாபாளையம் ராஜ வாய்க்கால் கடைமடைப் பகுதி விவசாயிகள் சங்கத்தின் பொருளாளராகப் பங்கு கொண்டு தமது பணியினைச் சிறப்பாகச் செய்து முடித்தார்.

**4. 1995**ல் பெரிய குளத்துப்பாளையம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு அரசு உதவி பெற்று பள்ளிக் கட்டிடம் கட்டுவதில் முக்கியப் பங்கு வகித்தார்.


**5. 31.03.2000** ஆம் ஆண்டில் கரூர் – சேலம் பைபாஸ் சாலையில் பாலம் கட்டுவதில் முக்கியப் பங்கு கொண்டார்.

**6. 04.04.2000** ஆம் ஆண்டில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசு நிதியுடன், மேலும் பொதுமக்கள் நிதியுடனும் சின்னகுளத்துப் பாளையம். புது குளத்துப்பாளையத்திற்கு சேர்த்து இடுகாடு கட்டி, அது இன்று ஒரு பூங்கா போல் இருப்பதற்கு, அவர் தனது முழு நேரத்தைச் செலவழித்தது தான் காரணம்.

கொங்கு இனத்திற்கு நன்மை செய்வதற்கென்று எந்த ஓர் அமைப்பு தோன்றினாலும் அதில் தன்னை இணைத்துக் கொண்டு இன்றும் தனது வயதையும் பாராமல் பங்கெடுத்துக் கொண்டு சமுதாயப்பணி ஆற்றி வருகிறார்.

அனைத்து கொங்கு வேளாளர் சங்கங்கள் கூட்டமைப்பில் முழுமையாகப் பங்கெடுத்துக் கொண்டு எந்த ஊரில் கூட்டங்கள் நடந்தாலும் தவறாமல் கலந்து கொண்டு தன்னுடைய அறிவுரைகளை வழங்கி வருகிறார். அன்னார் அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து இந்தச் சமுதாயத்திற்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்து புகழ்பெற வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

# சாதனையாளர்



## டாக்டர். ஆர். ராஜவேலு

மருத்துவப்பணி என்பது உயிர்காக்கும் பணி. ஆண்டவன் படைத்த அரிய உயிரை அவனாக எடுப்பதற்கு முன் போகவிடாமல் தடுக்கும் மருத்துவர்கள் ஆண்டவனின் அவதாரங்களே. அதற்காகத்தான் வருடந்தோறும் நாம் சிறந்த மருத்துவர்களை, மருத்துவத்தை வெறும் தொழிலாகக் கருதாத உன்னத நோக்கம் கொண்டவர்களைத் தேர்வு செய்து சாதனையாளர் விருது வழங்கி வருகிறோம். அந்த வரிசையில் இந்த வருடம் நாம் தேர்ந்தெடுத்திருப்பது டாக்டர் ஆர். ராஜவேலு அவர்கள்.

36 வயதே நிரம்பிய இளைஞர் டாக்டர் ராஜவேலு அவர்கள் நாமக்கல் மாவட்டம், குட்டிபாளையம் காரி குல திரு. ராமசாமி – திருமதி குஞ்சம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர். பொது அறுவைச் சிகிச்சை நிபுணரான டாக்டர் ராஜவேலு குஜராத் மாநிலத்தில் 7 ஆண்டுகள் பணியாற்றி விட்டு மனநிறைவு அடையாத காரணத்தினால் கொங்கு நாட்டிற்றே திரும்பி வந்தவர். தன்னைப் பெற்றெடுத்த, தன்னை வளர்த்து ஆளாக்கிய இந்தக் கொங்கு மண்ணிற்கு தான் படித்த மருத்துவத்தை நன்றிக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும் என்று எண்ணம் கொண்டு திருச்செங்கோட்டிற்கு வந்து “கொங்கு மருத்துவமனை” என்ற பெயரில் சமுதாயப் பற்றுடன் மருத்துவம் செய்ய ஆரம்பித்தவர் நமது டாக்டர் அவர்கள்.

இவருடைய மருத்துவமனையில் வாரத்திற்கு இரு ஆபரேஷன்கள் இலவசமாகச் செய்யப்படுகிறது. மேலும் நோயாளிகளிடம் இருந்து மருந்து மற்றும் இதர செலவுகளுக்கான தொகை ஏதும் பெறப்படுவதில்லை.

வசதியற்ற ஏழைப் பொதுமக்களுக்கு இலவசமாக அவர்கள் தங்குவதற்கு படுக்கை வசதி ஏற்பாடு செய்யப்படுகிறது. இவருடைய மருத்துவமனை 23 படுக்கைகளுடன் அனைத்து நவீன வசதிகளையும் கொண்டுள்ளது.


இந்த இளம் வயதிலேயே சமுதாய எண்ணமும், சேவை மனப்பான்மையும் இவரிடம் மேலோங்கி இருப்பது நமக்கு மகிழ்ச்சியையும், பெருமையையும் அளிக்கிறது. இவருடைய எதிர்காலத் திட்டம் இலவசமாக Surgical and Laproscopic Camp-ஐ ஏற்பாடு செய்வது ஆகும்.

ஒரு சிலர் மருத்துவத்தைக் காசாக்கிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் மருத்துவத்தை முழுக்க முழுக்க புனிதமான சேவையாகச் செய்து வருவது மிகவும் பாராட்டுக்குரியது.

மருத்துவம் மட்டுமன்றி கொங்கு சார்ந்த நற்பணி அமைப்புகளுக்கு ஊக்கம் கொடுத்துப் பொருளுதவி பல செய்து வருகிறார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் கட்டிதத்தின் கட்டிட நிதியில் கூட அவர் பங்கு உண்டு.

செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கேற்ப தான் செய்யும் தொழிலை கடவுளுக்கு ஆற்றும் சேவையாகச் செய்து வரும் இந்த இளைஞருக்கு இந்த ஆண்டு சாதனையாளர் விருதை வழங்கி கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

## சாதனையாளர்



## அருமைக்காரர் பொன்னுசாமிக் கவுண்டர்

ஐயர்களையும், புரோகிதர்களையும் வைத்துத் திருமணம் நடத்துகின்ற இந்த நாளிலும், முகூர்த்த நாட்களில் பிராமணர்கள் காலை 2 மணிக்கே இரண்டு சக்கர வண்டிகளில் கிளம்பி நேரம் குறித்துக் கொண்டு 10 கல்யாணங்களை ஒரு நாளில் நடத்தும் இந்த நாளிலும், அந்த அந்தச் சமுதாயப் பெரியோரை வைத்து திருமணம் நடத்தும் பண்பாடு இன்னும் நமது சமுதாயத்தில் மட்டும்தான் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

கல்யாணத் தேதியைக் குறிக்கும்போதே, அருமைக்காரர் என்று சொல்லபடும் நமது சமுதாயப் பெரியவரின் வேலைகளை அறிந்து கல்யாணத்திற்கு அவரால் வர இயலுமா என்று தேடப்படும் நிலை இருக்கிறது. அந்த அளவிற்கு அருமைக்காரகள் இன்று குறைந்து விட்டார்கள். அருமைக்காரர் ஆவது என்றால் அவ்வளவு சுலபமான காரியம் அல்ல என்பது நம் அனைவருக்கும் தெரியும்.

ஒருவர் அருமைக்காரர் ஆகிவிட்டால் அதற்குரிய கட்டாயங்களுக்கு உட்பட்டுத் தங்களுடைய வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் உள்ளது. அவர்களுடைய சொந்த வேலைகளை முழுமையாக மறந்து பொதுப்பணியில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இப்படிப்பட்ட நிலையில் மொடக்குறிச்சி கிராமம் மஞ்சக்காட்டுவலசைச் சேர்ந்த திரு. பொன்னுசாமிக் கவுண்டர் தொடர்ந்து 25 ஆண்டுகளாகத் திருமணங்களில் அருமை செய்து வருவது பாராட்டுக்குரியது. முழுக்க முழுக்க தர்மப்பணியாக சாதி, சமய சம்பிரதாய சமூகப் பணியாகச் செய்து வருவது சிறப்பாகும்.

1938–ம் ஆண்டு தூரன் குலத்தை சேர்ந்த திரு. கே. முத்துச்சாமிக் கவுண்டர் – திருமதி காளியம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இதே சிற்றூரில்தான் இவரது ஒன்றுவிட்ட பெரியப்பா மகனாக கலைக்களஞ்சியங்கள் படைத்த முத்தமிழறிஞர் திரு.ம.ப. பெரியசாமி தூரன் 1908–ல் பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**1967** முதல் மொடக்குறிச்சி கிராம நலக் கமிட்டிப் பணிகளில் பங்கெடுத்துக் கொண்டு பணியாற்றி வந்திருக்கிறார். தற்பொழுது கிராம நலக் கமிட்டியின் பொருளாளராக உள்ளார். மொடக்குறிச்சியில் கிராமக் கமிட்டி மூலம் ரூ. **1** கோடி செலவில் கட்டப்பட்ட திருமண மண்டபத்தில் இவருடைய பங்கு பாராட்டுக்குரியது.

இவரை அருமைக்காரர் ஆக்கிய அதே வைபவத்தில், இவருடைய மனைவி திருமதி. பழனியம்மாள் அருமைக்காரி பதவியில் அமர்த்தப்பட்டார். மனைவியுடன் இருக்கும் ஒருவர்தான் அருமைக்காரர் பதவியில் இருக்க முடியும். அதுதான் மரபு. இவருக்கு, திருமணமான ஒரு மகளும், மகனும் உள்ளனர்.

திருமண வைபவங்களில் உறவினர்கள் வருகையைப் பதிவு செய்துவிட்டு பத்து நிமிடத்தில் மன்டபத்தை விட்டு வெளியேறும் இந்நாளில் தூக்கம் விழித்து மணிக்கணக்கில் மண்டபத்தில் காத்திருந்து காரியம் ஆற்றும் பொறுமையும், பொறுப்பும் உடையவர் இவர். ஒரு வீட்டுத் திருமணத்தில் அருமைச்சீர் செய்து வெற்றிலை பாக்கு, தாம்பூலம் வாங்கி ஒப்புக் கொண்டுவிட்டால் எந்தச் சூழ்நிலையிலும் தவறாமல் அருமைச்சீர் செய்து திருமணம் நடத்தி வைப்பவர். அருமைச்சீர் செய்வதற்காக எந்தப் பிரதி உபகாரத்தையும் திருமண வீட்டாரிடம் எதிர்பார்க்காதவர்.

அருமைக்காரர் மகத்துவம் பற்றி கம்பர் எழுதிய மங்கள வாழ்த்துப் பாடலில் குறிப்பிட்டுள்ளதாவது :

“கணபதி தெய்வம்முன் கட்டும்மாங் கல்யம்வைத்து
அருமைப் பெரியவர் அன்புடன் பூசைசெய்து
மாப்பிள்ளை பெண்ணை மணவறையில் எதிர் நிறுத்தி
கெட்டிமேளம் சங்கநாதம் கிடுகிடு என்றும் சப்திக்க
மாணிக்கம் போல மாங்கல்யம் திருப்பூட்டி
ஆரம்தனைச் சூட்டி அமர்ந்தபின் மணவறையில்
மாப்பிள்ளைக்கு மைத்துனரை வாவென்று தானழைத்து
கலம்பெரிய அரிசிதன்னில் கைகோர்வை தானுமிட்டு

சிங்காரமான அந்தத் தெய்வச் சபைதனிலே

கங்கா குலம்விளங்க கம்பர் சொன்ன வாழ்த்துரையை

மங்கலமும் கன்னிசொல்ல வாத்தியமெல்லாம் அடக்கி மறையோர்கள்

வேதம்சொல்ல மற்றவர்கள் ஆசிகூற

பிறை ஆயிரம் தொழுது பிள்ளையார்க்குப் பூஜைசெய்து

அருமைபெற்ற பெரியோர்கள் அருகுமணம் செய்தபின்பு

கைக்குக்கட்டின கங்கணமும் தானவிழ்த்து....."

இந்த மானிட உயிர்கள் ஒவ்வொருவரும் சுயநலம் பார்த்து இயங்கக் கூடிய இந்த நாளில் பொதுச் சேவையாக திருமணங்களில் அருமை செய்து நமது கொங்குச் சமுதாயத்தின் கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் காத்து வரும் திரு. எம். பொன்னுசாமிக் கவுண்டர் அவர்களை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் சமுதாயமே பாராட்டுகிறது.

## சாதனையாளர்



## திரு. இள. தங்கதுரை

கல்விஒரு விற்பனைப் பொருளாக ஆகியிருக்கின்ற காலம் இது. கட்டண அளவிற்கு ஏற்றவாறு கல்வி நிறுவனங்களின் தரத்தைப் பிரிக்கக்கூடிய காலம் இது. தனிமனிதர்களின் பொருளாதார வசதிக்கேற்ப இந்தப் பள்ளிக்கூடத்துக்குத்தான் செல்ல வேண்டும் என்று தரம் பிரித்துப் பார்க்கின்ற காலங்களிலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் இப்படி இருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலும் கல்வியை வைத்து காசு பண்ண விரும்பாத கல்வியாளர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த வகைப்பட்ட கல்வி நிலையங்களில் ஒன்றுதான் கரூர் மாவட்டம் நடையனூரில் உள்ள அரங்கசாமி கவுண்டர் கல்வி நிறுவனங்கள். கரூர் மாவட்டம், நடையனூர் செங்கண்ணி கூட்டத்தைச் சேர்ந்த திரு. இளங்கோவன் – திருமதி செல்லம்மாள் தம்பதியினருக்கு 02.03.1954இல் மகனாகப் பிறந்த திரு. இள. தங்கதுரைதான் இக் கல்வி நிறுவனங்களின் நிர்வாகி மற்றும் செயலாளர்.

தாம் பெறாத கல்வியைத் தான் சார்ந்த இந்தச் சமுதாயம் பெற வேண்டும் என்பதற்கேற்ப 1952ல் திரு. இளங்கோவன் அவர்கள் ஏற்படுத்தப்பட்டதுதான் அரங்கசாமிக் கவுண்டர் கல்வி நிறுவனங்கள். திரு. இளங்கோவன் அவர்களின் மகனாகப் பிறந்தவர்தான் திரு. இள.தங்கதுரை.

கல்விக் கண்ணைத் திறக்க முழுமையாகப் பாடுபட்ட திரு. இளங்கோ அவர்கள் தன் இரண்டு கண்களையும் இழந்தவர் என்று அறியும்போது மனம் இறுகுகிறது.


இளம் வயதிலேயே தந்தையை இழந்ததால் திரு. தங்கதுரை அவர்களுக்கு மிகப்பெரிய பொறுப்புகள் தலையில் விழுந்தன. 1989, 1990ல் 163 மாணவர்களை கொண்டிருந்த பள்ளி இன்று ஆயிரத்தைத் தொடுகின்றதென்றால் அதற்குக் காரணம் இள. தங்கதுரை அவர்களுடைய கடின உழைப்பும், கல்வியைக் காசாக்கக் கூடாது என்ற எண்ணமும்தான்.

இந்தப் பள்ளியில் இலவசமாகக் கல்வி கற்று, இன்று மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் இருப்பவர்கள் ஏராளமானவர்கள். இவருடைய சீரிய கோட்பாடுகளால் கடந்த 19 ஆண்டுகளாக SSLC பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்று கரூர் மாவட்டத்தில் முதன்மை பெற்று விளங்குகிறது. பள்ளிக்கு வரும் மாணவ, மாணவிகளை அவருடைய குழந்தைகள் போல் பாவித்து அவர்களுடைய எதிர்காலத்தைச் செப்பனிட உதவியாக இருக்கிறார். பள்ளிப்படிப்பை தொடர முடியாமல் இடையில் நின்றுவிடும் குழந்தைகள் வீட்டுக்கு நேரடியாகச் சென்று குடும்பத்தில் உள்ள அனைவரிடமும் கல்வியின் அவசியத்தை உதாரணங்களுடன் எடுத்துக்கூறி, திரும்பவும் படிப்பைத் தொடர வைக்கும் குணாதிசயம் கொண்டவர்.

பள்ளியில் படிப்பை முடித்துவிட்டு வெளியில் செல்லும் மாணவ, மாணவிகளுக்கு மேற்படிப்பிற்குத் தேவையான உதவிகளைச் செய்வதுடன் வழிகாட்டியாகவும் இருந்து வருகிறார்.

இப்படி 50 வருடங்களுக்குமேல் கல்விச் சேவை செய்து வரும் கல்வி நிறுவனத்தின் நிர்வாகி மற்றும் செயலர் திரு. இள. தங்கதுரை அவர்களை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்தி சாதனையாளர் விருதளித்து மகிழ்கிறது.

## சாதனையாளர்



## திரு. எஸ்.கே. சுப்ரமணியம்

அமைதிப் பெருங்கடலில் அலைகளுக்கு அடியில் உள்ள ஆழ்கடல் முத்தைப் போன்றவர் இவர். இடது கை கொடுப்பது வலது கைக்குத் தெரியக்கூடாது என்று நினைக்கும் பொது சேவகர், ஆன்மீகப் பண்பாளர் திரு.எஸ்.கே.சுப்ரமணியம்.

கோவை மாவட்டம், பல்லடம் வட்டம் சோமனூரில் ஆந்தை குலத்தில் திரு. கருப்பசாமிக் கவுண்டர் அவர்களுக்கு மகனாகப் பிறந்தார். சோமனூர் பகுதியில் உள்ள கொங்கு அமைப்புகளில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். **1983–ம்** ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கொங்கு வேளாளர் அறக்கட்டளையில் பொருளாளர் பொறுப்பில் தொடர்ந்து இருந்து வருகிறார். **1985–ல்** ரூ.**20** லட்சம் செலவில் கட்டப்பட்ட கொங்கு வேளாளர் கலையரங்கம், **1999–ல் 1** கோடி ரூபாய் செலவு செய்து புதுமைப்படுத்தி நவீன முறையில் வடிவமைத்து பெரிய மண்டபமாக ஆக்கியதில் பெம்பங்கு அன்னாருக்கு உண்டு.

சோமனூர் பகுதியில் **1999**ம் ஆண்டு கொங்கு வேளாளர் மெட்ரிக் மேனிலைப்பள்ளியை துவக்கி இன்றும் அதன் பள்ளி நிர்வாகியாக இருக்கிறார். தற்போது **2500** கிராமப்புற மாணவ, மாணவியர் கல்வி பயில்கின்றனர். ஆரம்பம் முதலே பள்ளியின் **10**வது மற்றும் **12**ம் வகுப்பில் மாணவ, மாணவியர்கள் **100%** தேர்ச்சி பெற்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கொங்க சமுதாயப்பணி என்பது ஆண்மீகச் சேவையின்றி, நிறைவேறுவதில்லை. கொங்கு சமுதாயம் தோன்றிய காலம் முதலே கடவுள் நம்பிக்கையுடன் முன்னேறி வரும் சமுதாயம். அதனால் ஆன்மீகப் பணியைச் சமுதாயப்பணியிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது.

சோமனூர் அருகிலுள்ள சென்னியாண்டவர் திருக்கோவிலுக்கு கொங்கு வேளாளர் அறக்கட்டளை உறுப்பினர்கள் தலைமையேற்று, லட்சக்கணக்கில் நிதி திரட்டி, செலவு செய்து 2 தேர்களைச் செய்ததில் பெரும் பங்கு ஆற்றியவர். தன் பங்குக்குப் பொருள் உதவி செய்தது போக, தமிழக அரசிடம் இருந்து ரூ. 5 லட்சம், நிதியாகப் பெறுவதிலும் முனைப்பாகச் செயலாற்றியவர்.


தேசிய நெடுஞ்சாலை 47ல் அவினாசி அருகில் அமைந்துள்ள அருள்மிகு. செல்வநாயகி அம்மாள் திருக்கோவிலில் திருமண மண்டபம் கட்ட முன்னின்று மண்டப வேலைகளை முடித்தவர்.

அமைதியான தொழிலதிபர். சோமனூர் பகுதியில் இந்துமதி டெக்ஸ்டைல்ஸ் மற்றும் பிருந்தாவன் காட்டன் மில்ஸ் என்ற பெயரில் நூற்பாலைகளையும், விஜயலட்சுமி சைசிங் மில்ஸ் என்ற நிறுவனத்தையும் நிறுவி நிர்வகித்து வருகிறார்.

53 வயது நிரம்பிய அன்னாரது மனைவியின் பெயர் திருமதி தேவசேனா. மூன்று பெண் குழந்தைகள். அதில் ஒருவருக்குத் திருமணமாகிவிட்டது.

அமைதிப் புரட்சியயை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் பெற்றவர். அவருடைய சமுதாயப் பணிகளை அவர்தான் நன்கு அறிவார். அன்னாருடைய பணிகள் அவருடைய ஆசைப்படி இதுபோலவே தொடர வாழ்த்துக்கள். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் சாதனையாளர் விருது வழங்கி பாராட்டுகிறது.

## சாதனையாளர்



## செல்வி Y. பிரதீபா

வெள்ளக்கோயிலுக்கு அருகில் கந்தசாமி பாளையத்தில் திரு. யுவராஜன் – திருமதி துளசி தம்பதியினருக்கு மகளாகப் பிறந்த மணியங்குலச் செல்வி. பிரதீபா, செஸ் போட்டிகளில் கொங்கு கொடியை நாட்டி வருகிறார். அவர் வாங்கியிருக்கும் பதக்கங்களுக்குக் கணக்கில்லை.

அவை அனைத்தையும் இங்கு பட்டியலிட்டால் இடம் போதாது.

1) 1999–ல் ஸ்பெயினில் நடந்த 16 வயதுக்குட்பட்டவர்களுக்கான அனைத்து உலகப் போட்டியில் 15வது இடத்தைப் பிடித்தவர்.

2) 2000–ல் ஸ்பெயினில் நடந்த 16 வயதுக்குட்பட்டவர்களுக்கான அனைத்து உலகப் போட்டியில் 13வது இடத்தைப் பிடித்தவர்.

3) 2001–ல் லண்டனில் நடந்த காமன் வெல்த் போட்டிகளில் வெங்கலப் பதக்கம் பெற்றார்.

4) 2002–ல் சர்வதேச ஜூனியர் போட்டியில் 15வது இடத்தைப் பிடித்தார்.

5) 2002–ல் கொழும்பில் நடந்த ஆசிய ஜூனியர் போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்றார்.

6) 2003–ல் கொழும்பில் நடந்த அதே போட்டியில் தங்கப் பதக்கமும் வென்ற கொங்கு தங்க மங்கை இவர்.

7) 2004–ல் லண்டனில் நடந்த காமன் வெல்த் போட்டிகளில் வெங்கலப் பதக்கம் வென்றார்.

8) மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு.சுனில்தத் தத்

அவர்களிடமிருந்து பாராட்டும் பட்டயமும் வாங்கியவர் ஜனாதிபதியிடமிருந்து விருது வாங்கியவர்.

செயிண்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் 2ஆம் ஆண்டு படிக்கும் செல்வி பிரதீபா விளையாட்டுத் திறமைக்காக, கட்டணம் ஏதுமில்லாமல் கல்லூரிக்கும் பெருமை சேர்ப்பதற்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர். கொங்கு சமுதாயத்தின் சார்பில் கல்லூரிக்கு நன்றி தெரிவிப்போம். விளையாட்டில் மட்டுமல்ல படிப்பிலும் ஜொலிக்கும் நட்சத்திரம் செல்வி பிரதீபா.

கொங்குக் குலப் பெண்மணிகள் படிப்பிலும் விளையாட்டுத் துறையிலும் வியத்தகு சாதனைகள் செய்து வருவது மகிழ்ச்சியை அளிக்கிறது. செஸ் விளையாட்டு என்பது மனதை ஒருமுகப்படுத்தி, நம் கவனம் முழுவதையும், விளையாட்டில் செலுத்தி ஆட வேண்டிய விளையாட்டு ஆகும். நம் கவனம் சிறிது சிதறினாலும், ஆட்டத்தில் வெற்றி பெற முடியாது.

இந்த இளம் வயதிலேயே வித்தியாசமான துறையில் இவர் வியத்தகு சாதனைகள் செய்து வருவது நமக்கு மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும் அளிக்கிறது. நமது நாட்டில் மட்டுமல்லாமல் ஸ்ரீலங்கா, லண்டன், ஸ்பெயின் உள்ளிட்ட பல வெளிநாடுகளில் நடந்த போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

இவருடைய சாதனை உலக அளவில் விரிந்து பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்தி சாதனையாளர் விருது அளிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் மகிழ்ச்சியடைகிறோம்.

## செல்வன் எஸ். வெங்கடாசலம்

திரு. எஸ். வெங்கடாசலம் அவர்கள் ஈரோடு மாவட்டம் மேட்டுக்கடை நத்தக் காட்டுப்பாளையத்தில் வசித்து வரும் திரு. சண்முகம் – திருமதி சரஸ்வதி தம்பதியரின் மகன் ஆவார். இவர் 2004ஆம் ஆண்டு நடந்த சிவில் சர்வீஸ் தேர்வில் 25வது இடத்தைப் பிடித்து ஐ.எப்.எஸ். (IAS) ஆகத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பி.எஸ்.சி. மற்றும் எம்.எஸ்.சி. (வனவியல்) தொழில்பட்டப் படிப்பு முடித்தார். எம்.எஸ்.சி. முதுகலைப் படிப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்று தங்கப்பதக்கம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மனம் தளராது தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் உழைத்தால், இளைஞர்கள் தாங்கள் நினைத்த துறைகளில் கால் பதிக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் இவர். தமது பணியில் மேலும் பல சாதனைகள் புரிய வேண்டும் என வாழ்த்தி கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## செல்வி எம். ஜானகி

கரூர் மாவட்டம் ஆண்டான் கோவில் கிராமத்தைச் சேர்ந்த **எம்.ஜானகி** சென்ற ஆண்டு நடைபெற்ற சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி அடைந்து 87–ஆம் இடத்தைப் பெற்று IAS அதிகாரியாகத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

தமிழ்நாடு தேர்வாணையக் குழு (TNPSC) அலுவலகத்தில் பணியில் இருந்து கொண்டு கடந்த நான்கு முறைகளாகத் தொடர்ந்து விடா முயற்சியுடன் தேர்வினை எழுதி இறுதியில் இத்தேர்வில் அகில இந்திய அளவில் 87வது இடத்தைப் பெற்று சிறப்புறத் தேர்வு பெற்றுள்ளார். இத்தேர்வுகளை எழுதும்போது கொங்கு நாடு இல்லத்தில் சலுகைக் கட்டணத்தில் அறை வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

செல்வி ஜானகி தன் பணியில் மேன்மேலும் சிறந்து விளங்கி நம் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்திட வேண்டும் என வாழ்த்தி, இவரை பாரட்டுவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## செல்வி M. சக்தி பிரியா

நாமக்கல் மாவட்டம் வையப்பமலை கிராமத்திலுள்ள செம்பூத்தன் கூட்டத்தைச் சார்ந்த திரு. டி.ஆர். முத்துசாமி – திரு. எம். பழனியம்மாள் அவர்களின் மகள் **எம். சக்திபிரியா** அவர்கள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக கால்நடை மருத்துவப்பட்டப் படிப்புத் தேர்வில் பல்கலைக் கழகத்திலேயே முதல் மதிப்பெண் பெற்று பல்வேறு அமைப்புகள் வழங்கிய **21** தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

இவரது சாதனையைப் பாராட்டி **09.06.2005** அன்று சென்னை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் மேதகு பர்னாலா அவர்கள் பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பதற்கேற்ப ஒரு சாதாரணக் கிராமத்தில் பிறந்து தன்கடின உழைப்பாலும், விடாமுயற்சியாலும் தன் படிப்பில் இமாலயச் சாதனை படைத்த சக்திப்பிரியாவைப் பாராட்டி, கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

# இளம் கொங்கு மணிகள்

## செல்வி சக்தி சம்யுக்தா

செல்வி **சக்தி சம்யுக்தா பிராபாகரன்** அவர்கள் ஈரோடு மாவட்டம், கள்ளிப்பட்டியைச் சேர்ந்த திரு. கே.சி. பிரபாகரன் – திருமதி பி. மல்லிகா அவர்களின் மகள் ஆவார். இவர் தான் படித்த சென்னை, சவீதா பல் மருத்துவக் கல்லூரியில் B.D.S. பட்டப்படிப்பில் தொடர்ந்து முதல் இடத்தைப் பிடித்தும், இறுதி ஆண்டில் Best Outgoing Student தங்கப் பதக்கமும் பெற்றுள்ளார்.

இவரது திறமையைப் பாராட்டி சவீதா நிகர்நிலைப் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் N.M. வீரைய்யன் அவர்கள் செல்வி சக்தி சம்யுக்தாவிற்கு M.D.S. மேற்படிப்பிற்கு முழுவதும் இலவசமான இடத்தை வழங்கி, இந்தக் கொங்குச் செல்வியை ஊக்கப்படுத்தியுள்ளமைக்கு அன்னாருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த 17 ஆண்டுகளாக இயங்கி வரும் சவீதா பல் மருத்துவக் கல்லூரி, நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆண்டிலேயே, நம் கொங்கு சமுதாயத்தைச் சேர்ந்த செல்வி சக்தி சம்யுக்தா முதல் இடத்தைப் பிடித்து நம் அனைவருக்கும் பெருமை தேடித்தந்துள்ளார். வியத்தகு சாதனை புரிந்த இவரைப் பாராட்டி, கௌரவப்படுத்துவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## செல்வி G. சத்யா

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வட்டம், கந்தம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த தேவேந்திரகுல திரு. ஏ. குருசாமி அவர்களின் மகள் செல்வி. ஜி. சத்யா 2005ம் ஆண்டு நடைபெற்ற +2 அரசுத் தேர்வில் 1200க்கு 1185 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்திலேயே முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் தமிழில் 196 மதிப்பெண்களும், ஆங்கிலத்தில் 189 மதிப்பெண்களும், இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதம் ஆகியவற்றில் தலா 2011 மதிப்பெண்களும் பெற்றுள்ளார். இவர் நாமக்கல் குறிஞ்சி மேல்நிலைப்பள்ளி மாணவி ஆவார். சந்தர்ப்பம் கிடைத்தால் நமது செல்வங்களும் சாதனைகள் படைக்க முடியும் என்பதற்கு இவர் ஓர் எடுத்துக்காட்டு செல்வி. ஜி. சத்யா மென்மேலும் வாழ்க்கையில் வெற்றி பெற வாழ்த்தி, இவரது சாதனையைப் பாராட்டி, கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

# இளம் கொங்கு மணிகள்

## செல்வன் G. கவியரசு

திரு. **G. கவியரசு** 02.04.1982 அன்ற திருப்பூரைச் சேர்ந்த பொருள்தந்த குல திரு. ஆர். கோவிந்தசாமி – திருமதி ராஜம்மாள் தம்பதியினருக்கு மகனாக பிறந்தார். இவர் தற்போது சென்னை, SAKSOFT COMPANYயில் Software Engineer ஆகப் பணிபுரிகிறார். சென்னை வந்தவுடன் Madras Riding club-ல் சேர்ந்து B.E. படிக்கும் போதே குதிரையேற்றப் பயிற்சி பெற்றார்.

இளமை வேகமும், துடிப்பும் கொண்ட கவியரசு அவர்கள் குதிரை ஏற்ற விளையாட்டில் ஆச்சரியப்பட வைக்கும் சாதனைகளைச் செய்து வருகிறார். இவர் தினமும் அதிகாலை **5.30** மணியிலிருந்து **7.00** மணிவரை குதிரை ஓட்ட பயிற்சி எடுக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. நமது சமுதாய இளைஞர்கள் பெரிய மலைகளையும் தூளாக்கும் வல்லமை படைத்தவர்கள் என்பதற்கு இவர் ஒரு சிறந்த உதாரணம் ஆவார்.

குதிரையேற்றம் இளைஞர்களுக்கு உடல் உரத்தையும், தன்னம்பிக்கையும் கொடுக்கக் கூடிய ஒரு சிறந்த பயிற்சி என்று சொல்லும் இவர் **2004**ஆம் ஆண்டு செவாலியர் சிவாஜி கணேசன் விருது மற்றும் போலீஸ் கமிஷனர் திரு. நடராஜனிடம் பாராட்டுகளும், விருதும் உள்பட பல விருதுகளையும், பாராட்டுகளையும் பெற்றுள்ளார்.

இவருடைய சாதனை பார் போற்றும் அளவிற்கு வளர வேண்டும் என்று சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்தி கௌரவிக்கிறது.

# இளம் கொங்கு மணிகள்

## செல்வன் ஏ.எஸ். லோகேஸ்வரன்

செல்வன் ஏ.எஸ். லோகேஸ்வரன் அவர்கள் திரு. சிவசுப்ரமணியம் – திருமதி மீரா தம்பதியருக்கு **1985**ஆம் ஆண்டு பிறந்தார். டெல்லி பல்கலைக்கழக செயின்ட் கல்லூரியில் ஸ்டீபன்ஸ் இரண்டாம் ஆண்டு இளநிலை பட்டப்படிப்பு பயின்று வருகிறார்.

இவர் துப்பாக்கிச் சுடும் போட்டியில் தங்கம் உள்பட பல பதக்கங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. "தமிழ்நாடு ஷூட்டிங் அசோசியேஷன்", "சென்னை ரைபில்ஸ் கிளப்", "தமிழ்நாடு துப்பாக்கிச் சுடும் கழகம்" ஆகியவை இணைந்து நடத்திய **30**வது மாநில துப்பாக்கிச் சுடும் போட்டியில் "டபுள் டிராப்" பிரிவில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். மேலும் **2004**–ம் ஆண்டு டிசம்பர் மாதம் புதுடில்லியில் நடைபெற்ற துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது விளையாட்டுத் துறையில் லோகேஸ்வரன் மேலும் பல சாதனைகள் புரிய வேண்டும் என வாழ்த்தி, அவரைப் பாராட்டுவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## செல்வி. B. அபராஜிதா

இளம்புயல் **அபராஜிதா** திரு பாலமுருகள் – திருமதி சுமதி தம்பதியரின் மகள் ஆவார். தனது 11 வயதிலேயே ஸ்குவாஷ் போட்டியில் சிறப்பான சாதனைகள் செய்து கொண்டிருக்கும் இவர், கோலாலம்பூரில் நடைபெற்ற "மைலோ ஆல்ஸ்டார் அனைத்துலக ஜுனியர் ஸ்குவாஷ்" போட்டியில் மூன்றாவது இடத்தைக் கைப்பற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் இந்த ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்ற ஸ்குவாஷ் போட்டியில் 2வது இடத்தையும் பினாங்கில் நடைபெற்ற ஸ்குவாஷ் போட்டியில் 4வது இடத்தையும் பெற்றார். மேலும் ஹாங்காங்கில் ஸ்குவாஷ் போட்டியில் கலந்து கொண்டார்.

இவருடைய இலக்கு வரும் 2012ல் நடக்க இருக்கும் ஒலிம்பிக் போட்டியில் சிறப்பாக விளையாட வேண்டும் என்பதாகும். அதற்கு இப்போதிருந்தே அடித்தளம் போட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதற்கேற்ப இளம் வயதிலேயே நாட்டிற்கும், நமது சமுதாயத்திற்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் இவரைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

# இளம் கொங்கு மணி

## செல்வி. R. சுகன்யா

ஈரோடு மாவட்டம் பெருந்துறை கொங்கு வேளாளர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் +2 படித்து வரும் கொங்கு செல்வி ஆர். சுகன்யா கொங்கு வேளாளர் சமூகத்திற்கு மட்டுமின்றி, தமிழ்நாட்டிற்கும் இந்திய மண்ணிற்கும் பெரும் பெருமையைப் பெற்றுத் தந்துள்ளார்.

செல்வி சுகன்யா அவர்கள் தூரன் கூட்டத்தைச் சேர்ந்த திரு. பி. இராசு திருமதி விஜி தம்பதியரின் மகள் ஆவார். இவர் மாநில அளவிலும், தேசிய அளவிலும் பல்வேறு மகளிர் கால்பந்துப் போட்டிகளில் விளையாடி, அவருடைய அணி வெற்றி பெறக் காரணமாக விளங்குகிறார். இவர் விளையாட்டில் மட்டுமல்லாமல் படிப்பிலும் சிறந்து விளங்குகிறார்.

2005 ஏப்ரல் மாதத்தில் கொரியாவில் நடைபெற்ற உலகக் கால்பந்துப் போட்டியில் இந்தியாவிற்கு வெற்றி தேடித் தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இளம்புயல் செல்வி. சுகன்யா மேலும் பல சாதனைகள் புரிய மனமார வாழ்த்தி, கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

# V.ரூபாதேவி

இளம் வீராங்கனை செல்வி. V. ரூபாதேவி ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த புங்காட்டுவலசில் வசிக்கும் செ. சாரணவாசி திருமதி – மலர்க்கொடி தம்பதியரின் மகள் ஆவார்.

தடகளப் போட்டியில் அளப்பரிய சாதனைகள் செய்து கொண்டிருக்கும் இவர், தங்கப்பதக்கம், வெள்ளிப் பதக்கம் உள்பட பல பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

திண்டுக்கல்லில் நடைபெற்ற மாநில அளவிலான சுதந்திர தின தடகள விளையாட்டு போட்டியில் 16 வயதிற்குட்பட்டோர் மாணவியர் பிரிவில் செல்வி ரூபாதேவி அவர்கள் 400 மீட்டர் ஓட்டத்தில் முதலாவதாக வந்து தங்கப் பதக்கம் பெற்றார்.

நமது சமுதாய இளம் பெண்கள் படிப்பில் மட்டுமல்லாமல், விளையாட்டுத்துறையிலும் இமாலய சாதனை புரிந்து வருவது நமக்குப் பெருமை அளிக்கிறது. இவர் மேலும் பல சாதனைகள் புரிய வேண்டும் என வாழ்த்தி, கௌரவிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமையடைகிறது.

## செல்வி K. புவனேஸ்வரி

செல்வி கே. புவனேஸ்வரி நாமக்கல் மாவட்டம் புளியம்பட்டி சேரன் குல திரு. கிருஷ்ணமூர்த்தி – திருமதி ஹம்சவள்ளி தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தார்.

இவர் அண்ணா பல்கலைக் கழகத்தின்கீழ் இயங்கும் கிண்டியில் உள்ள College of Engineering - ல் B.Tech (Information Technology) 4ம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறார். மிகவும் புகழ்பெற்ற Microsoft நிறுவனம் நடத்திய தேர்வில், தேர்வான ஏழு மாணவர்களில் இவரும் ஒருவர். தனது அறிவாலும், திறமையாலும் மிகவும் புகழ்பெற்ற இந்நிறுவனத்தில் வேலையில் அமருவது நமக்கு மிகவும் பெருமையாக உள்ளது. வருகின்ற ஜுன் மாதத்தில் இவர் இந்நிறுவனத்தில் பணிபுரியச் செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு சாதாரண நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து தனது திறமையால் கணினித் துறையில் உலகப்புகழ் பெற்ற நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பைப் பெறுவது நமது சமுதாயத்திற்கே பெருமை அளிக்கக்கூடிய விஷயம். இவர் தமது பணியில் மேலும் புகழ்பெற வேண்டும் என சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.